
தரிசு
நான்கு வகை நாடகங்கள்
த.கலாமணி

# தரிசு

## நான்கு வகை நாடகங்கள்

த. கலாமணி

**தரிசு** (நான்கு வகை நாடகங்கள்)

**த. கலாமணி**

முதற்பதிப்பு: மார்கழி 2022

© திருமதி கு. கலாமணி

வடிவமைப்பு : க. பரணீதரன்

வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய்

பக்கம்: 80

விலை: 400.00

அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

**Tharisu (Four Kinds of Drama)**

**T.Kalamany**

First Edition:December 2022

© Mrs Q.Kalamany

Designed by K.Bharaneetharan

Published by Jeevanathy, Kalai aham, Alvai

Pages: 80

Price:400.00

Printed at Baranee Printers, Nelliady.

ISBN: 978-624-5881-66-6

ஜீவநதி வெளியீடு - 245

என்றும் எம்
கலைஊற்றாய் விளங்கும்
என் தந்தை
அண்ணாவியார், சோதிடர்
ச.தம்பிஐயா
அவர்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்

# பதிப்புரை

ஜீவநதியின் 245 ஆவது வெளியீடாக கலாநிதி த. கலாமணி அவர்களின் "தரிசு" நான்கு வகை நாடகங்கள் வெளியாகின்றது. த.கலாமணி அவர்கள் ஈழத்து நாடக வரலாற்றில் குறிப்பிடத்தக்க நடிகரும் அண்ணாவியாருமாக திகழ்பவர். தந்தை வழிச் சொத்தாக நாடகக்கலையை பெற்றவர் த.கலாமணி. எல்லா வகையான நாடகங்களிலும் த.கலாமணி கைதேர்ந்தவர் என்பது நாம் அறிந்ததே. அதற்கு கட்டியம் கூறுவது போல இந்நூலிலுள்ள நான்கு வகை நாடகங்களும் விளங்குகின்றன. த.கலாமணி அவர்கள் இசை நாடக பாரம்பரியத்தில் பிறந்து வளர்ந்தவர். த.கலாமணியின் தந்தையார் 2000 இற்கு மேற்பட்ட மேடைகளில் இசை நாடகங்களை நடித்தவர். த. கலாமணி அவர்களும் 200 இற்கு மேற்பட்ட மேடைகளில் பூதத்தம்பியாக, சத்தியவானாக, கோவலனாக, அர்ச்சுனனாக, பாண்டியனாக, நாரதராக, இராமனாக. சாவித்திரியாக, வாலியாக, அரிச்சந்திரனாக, காத்தானாக, விதுரனாக, வேடனாக, மார்க் கண்டேயராக, நந்தனாக, பாத்திர மேற்று நடித்தவர். பல்கலைக்கழக காலத் திலேயே சமூக நாடகப் பிரதிகளை எழுதி பல்கலைக்கழகத்தில் மேடையேற்றி சிறந்த நெறியாளாருக்கான பரிசுகளையும் பெற்றுள்ளார். நாடகத்தின் வகைமைகளை நன்கு புரிந்து கொண்டு நான்கு வகையான நாடகப்பிரதிகளை நாடக ஆர்வமுள்ளவர்களுக் காக நூலாக தந்துள்ளார். இப்பிரதியில் உள்ள நாடகங்களை நடித்து அனைவரும் பயன்பெற வேண்டும் என்பதே எமத அவா. மிகவம் எளிமையான வகையில் எல்லோரும் நடிக்க தக்க வகையில் இப்பிரதிகள் எழுதப்பட்டுள்ளமை சிறப்பு. ஜீவநதி வெளியீடாக இந்நூலை வெளியிடுவதையிட்டு மகிழ்வடைகின்றோம்.

- க. பரணீதரன்

# தரிசு

- சமூக நாடகம் -

பாத்திரங்கள்

தவமணி
கண்மணி
செல்வராசா
மணியம்
தீபன்
சிவசண்முகம்
தவமணியின் தகப்பன்

**அரங்க அமைப்பு**

| | | |
|---|---|---|
| மேல் வலது UR | மேல் மத்தி UC | மேல் இடது UL |
| மத்திய வலது CR | மத்திய மத்தி CC | மத்திய இடது. CI |
| கீழ் வலது DR | கீழ் மத்தி DC | கீழ் இடது DL |

(பின்னணியில் "சுபபந்துவராளி" ராகத்தில் வயலின் இசை ஒலிக்க அதே ராகத்தில் பாரதி பாடல் தொடர்கிறது )

வானமெங்கும் பரிதியின் சோதி
மலைகள் மீதும் பரிதியின் சோதி
தானை நீர்க்கடல் மீதிலுமாங்கே
தரையின் மீதும் தருக்களின் மீதும்...

(அரங்கினில் மெல்ல மெல்ல ஒளிபரவிக் கொண்டிருக்கிறது. அரங்கின் மத்திய இடதில் மேசை ஒன்றும் இரண்டு கதிரைகளும் போடப்பட்டிருக்கின்றன. மேல் மத்தியையும் மத்திய மத்தியையும் பிரிக்கும் எல்லையில் மரச்சட்டத்தால் பிணைக்கப்பட்ட "கதவு நிலை" ஒன்று நிறுத்தப்பட்டிருக்கின்றது. மேல் வலதுப்பிரிவில் சாக்குக் கட்டில் ஒன்றில் முதியவர் ஒருவர் இருமிக்கொண்டு படுத்திருக்கிறார்.

மத்திய மத்தியில் "கண்மணி" புத்தகம் ஒன்றைப் படித்த படி உலாவிக் கொண்டிருக்கிறாள். புத்தகத்தில் கவனக் குவிப்புச் செய்யாமல் குழம்பிக் கொண்டிருக்கிறாள்.

பாடல் தொடர்கின்றது)

சோதியென்னும் கரையற்ற வெள்ளம்
தோன்றியெங்கும் திரைகொண்டு பாய
சோதியன்றதோர் சிற்றிருள் சேரக்
குமைந்து சோரும் கொடுமையிதென்னே!

(பாடல் நிறைவுறும்போது, மேல் மத்தியிலிருந்து கதவு நிலையூடாக "தவமணி" துடைப்பம் ஒன்றால் நிலத்தைக் கூட்டியபடியே வருகிறாள். மேடையின் மத்திய வலதுக்குச் செல்லும் போது பேசத் தொடங்குகிறாள்.)

தவமணி : ஒருத்தருக்கும் பொறுப்பில்லை.. ஒரு பெம்பிளைப் பிள்ளை எங்களுக்காய் உழைச்சு மாயுதென்று ஆருக்கும் யோசினை இல்லை.

கண்மணி : (உள்ளே பார்த்து) தீபன்... தீபன் வந்து படியுங்கோவன் தம்பி... நாளைக்குச் சோதினை... இன்றைக்கு முழுவதும் படிச்சாத்தானே சோதினை செய்யலாம்.

(தீபன் உள்ளிருந்து கதவின் நிலைக்குள்ளால் வந்து, மேசையின் முன்னால் அமர்ந்து புத்தகத்தை விரித்துப் பார்க்கிறான்.)

தவமணி : விடிஞ்சு எட்டுமணியாகியும் அவருக்கு வெறிமுறி யேல்லை. நித்திரைப் பாயிலை இன்னும் நீட்டிக் கொண்டு படுத்திருக்கின்றார்..

(தீபன் படிப்பதை நிறுத்திவிட்டு, தாயையும் தமக்கையை யும் திரும்பிப்பார்க்கிறான்.)

கண்மணி : (தாயை இடைமறித்து) அம்மா, சும்மா புறுபுறுக்கா தேங்கோ தம்பி படிக்குதெல்லே

தவமணி : ஓ... தம்பி படிக்கிறாரே..... பாசாங்கு பண்ணிறான்..... தேப்பன்ரை புத்திதானே இருக்கும்.... இவனுக்கும் ஊர்சுற்றுறது தான்வேலை

கண்மணி : அம்மா! அவன் பாவம், அம்மா! அவனைச் சும்மா திட்டாதேங்கோ.....

தவமணி : எங்கடை கஸ்ரம் தெரிஞ்சாத்தானே.... ஒரு அக்கான்ரை சம்பளத்திலை தான் எல்லாம் நடக்குதென்று ஒரு விளக்கமுமில்லை...

(கண்மணி தாயைப் பார்க்கும்போது, சிறிது நிறுத்திவிட்டு, மீண்டும் தவமணி தொடர்கிறாள்)

தவமணி : எல்லாம் பொறுப்பில்லாத மனிசனாலை தான்... வீட்டிலை என்ன நடக்குது போகுது எண்டு தெரிஞ்சாத் தானே....

கண்மணி : சும்மா பேசாமல் இருங்கோ அம்மா....அப்பா இப்ப எழும்பி வந்து சண்டை பிடிக்கப்போகுது..

தவமணி: பொறுப்புள்ள மனிசனெண்டா எங்கட தறையைத் தரிசாப்போக விட்டிருப்பாரே...

கண்மணி: தறையள் மட்டுமில்லையம்மா... இப்ப எங்கள் எல்லாருடைய மனமும் தரிசாத்தான் இருக்கம்மா...

(செல்வராசா "நிலை" யினுடாக வருகிறார்)

செல்வராசா : பிலாக்கணம் கொட்டத் தொடங்கீட்டாவே... விடிஞ்சாப் பொழுது பட்டா நிம்மதியா இருக்கேலாது...

தவமணி: நான் அழுது புலம்பாமல் என்ன செய்யிறது...பெம்பிளைப் பிள்ளைக்கு முப்பது வயசாகுது... கலியாணஞ் செய்து கொடுக்க வேணும் எண்ட நினைப்பாவது இருக்கே...
(கண்மணி உள்ளே போகிறாள்... தீபன் படிப்பை நிறுத்தி விட்டு பெற்றோரின் கதைக்குக் காது கொடுக்கிறான்)

செல்வராசா : நானும் முயற்சித்துக் கொண்டு தானே இருக்கிறன்... தொழில் முயற்சி ஒண்டுஞ் சரிவரூதில்லை....

தவமணி : தொழில் முயற்சிதான் சரி வரேல்லை பிள்ளையின்ரை சம்பந்தத்துக்கெண்டாலும் முயற்சித்துப் பாருங் கோவேன்... பெம்பிளைப்பிள்ளையின்ரை சம்பாத்தியத் திலை இன்னும் எவ்வளவு காலம் கழிக்கப்போறியள்..

செல்வராசா : ஏன் தொங்குவறியிலை நிற்கிறாய்... நான் மணியம் அண்ணையட்டை சொல்லித்தான் வைச்சிருக்கிறன்...

தவமணி : (இடைமறித்து) நான் இப்பிடி நில்லாட்டில் ஏதும் இங்கை நடக்குமே....

செல்வராசா : கதையை முழுக்கச் சொல்ல விடனப்பா.... கொஞ்சம் தூரத்திலை.... சொந்தத்துக்குள்ளைதான், “பாங்கிலை பீயோனா வேலைபாக்கிற ஒரு பெடியன் இருக்கிறானாம்.. கொஞ்சம் சீதனம் கூடக் கேட்கினமாம்...”

தவமணி : மணியம் அண்ணை உதைப்பற்றி எனக்கும் சொன்னவர் தான்... பீயோனுக்கு ஏன் இவ்வளவு சீதனம் கேட்கினம்... பெடியனுக்குக் கொஞ்சம் குடிப்பழக்கமும் இருக்கெண்டு அறிஞ்சன்.

செல்வராசா: உனக்குத் தெரியாது.. பாங்கிலை மனேஜரா இருக் கிறவை கனபேர் பீயோனா இருந்துதான் மேலை வந்தவை... ஆர் இப்ப குடிக்கிறேல்லை... பாங்கிலை வேலை செய்யிற பெடியன்... கொஞ்சம் அப்பிடி இப்படித்தான் இருக்கும்.

தவமணி : நல்ல கூத்துத்தான்... குடிகாற மாப்பிளை வந்தால் சேர்ந்து குடிக்கலாம் எண்ட நினைப்புப் போலை...

செல்வராசா : (அடிக்கக் கை ஓங்கியபடி) உந்த நொட்டைக் கதையள் தானே வில்லங்கத்தைக் கொண்டு வாறது....

தவமணி : இனித்தொடங்கீட்டார்... இனி நல்ல விசயங்களைக் கதைச்சமாதிரித்தான்...

(விசும்பியபடி, சேலைத் தலைப்பால் கண்ணைத் துடைத்தபடி தவமணி உள்ளே செல்கிறாள்)

செல்வராசா : தீபன்... தீபன்... இஞ்சைவா.. உங்கை என்ன செய்து கொண்டிருக்கிறாய்...

தீபன் : (கதிரையில் இருந்தபடியே)
படிச்சுக் கொண்டிருக்கிறன் அப்பா...

செல்வராசா: இண்டைக்குத்தான் கண்டறியாத படிப்புப் படிச்சுக் கொண்டிருக்கிறாய். இஞ்சைவா... குலசேகரம் கடைக்குப் போய் ரெண்டு சிகரெட்டு வாங்கிக் கொண்டு வா...

(தகப்பனிடம் காசைப் பெற்றுக்கொண்டு கீழ் இடதால் வெளியேற, செல்வராசா நிலைக்குள்ளால் புகுந்து மேல் இடதுக்குச் செல்கிறார்.)

(வயலின் ஒலியில் "ஸாமா" ராகம் இசைக்கப்படுகின்றது. கண்மணி உள்ளிருந்து "ஹாண்ட் பாக்"கைத் தோளில் தொங்கவிட்டபடி வருகிறாள். சிவசண்முகம் கீழ் இடத்தால் பிரவேசிக்கிறான்.)

சிவசண்முகம் : மாமி.... மாமி.....

கண்மணி : (ஆச்சரியமாக விழித்தபடி) ஆர் சிவசண்முகம் அத்தானே... வாருங்கோ அம்மா இப்பத்தான் கோயிலடிக் கிணத்துக்கு நல்ல தண்ணி அள்ளப்போயிட்டா....

சிவசண்முகம்: ஆ, கண்மணி எப்பிடி இருக்கிறியள்... பள்ளிக்கூடம் எல்லாம் பிடிச்சுக் கொண்டுதோ...

கண்மணி : ஓம் அத்தான்... இப்ப ஆறுமாசமாத்தானே வேலையிலை சேர்ந்திருக்கிறன்...

சிவசண்முகம்: அதென்ன, இன்றைக்கு லீவு நாளிலை வெளிக்கிட்டுக் கொண்டு போறியள்..

கண்மணி: இன்றைக்கொரு "செமினார்" அத்தான்....

சிவசண்முகம்: எப்பிடி.... பள்ளிக்கூடத்துக்கு பிள்ளையள் எல்லாம் ஒழுங்கா வரீனமே....

கண்மணி: இப்ப வரத்தொடங்கீட்டினம்.. என்றாலும் பேயறைஞ்ச மாதிரித்தான் இருக்கினம்....

சிவசண்முகம் : பின்னை இருக்கும் தானே.. சுனாமியாலை எங்களுக் கெல்லாம் மிஞ்சினது உயிரிழப்பும் பயமும் வெறுமையுந் தானே...

(கண்களைத் துடைக்கிறான்)

கண்மணி : "சொறி" அத்தான்... உங்களைக் கவலைப்படுத்தீட்டன் போலை....

சிவசண்முகம் : சீ.. அப்பிடி ஒன்றுமில்லை நாங்கள் தான் பரவாயில்லை, சின்ன பிள்ளையள் பாவம் தானே...

கண்மணி : ஓ.. எப்பிடிப் படிப்பிச்சாலும் பிள்ளையளின்ரை கவனம் படிப்பிலை இல்லை... அதுசரி, பூமணி மச்சாள் எப்பிடி இருக்கிறா...

சிவசண்முகம்: தங்கச்சிக்கென்ன.. எனக்குச் சமைச்சுப் போடுறது தான் வேலை.... நான் தோட்டத்துக்குப் போயிட்டால் தனியாத் தான் இருக்கும்....

கண்மணி: பின்னேரத்திலை என்றாலும் இடைக்கிடை இங்கே கொண்டுவந்து விடுங்கோவன்... அம்மாவோடை கதைச்சுக் கொண்டிருந்தால் பராக்காயுமிருக்கும்...

சிவசண்முகம்: ஓம், சொல்லிப் பார்க்கிறன்....

கண்மணி : (ஒரு கதிரையை இழுத்துப் போடுகிறாள்)
இதிலை இருங்கோ... அம்மா இப்ப வந்திடுவா.... எனக்கு நேரமாகுது, நான் வாறன்.....
(கண்மணி வெளியேற, சிவசண்முகம் கதிரையில் அமர்கிறான். தவமணி தண்ணீர்க் குடத்துடன் வருகிறார்.)

தவமணி: (முகமலர்ச்சியுடன்)
தம்பி, சண்முகம்... எப்ப வந்த நீ? கண்மணி என்னவாம்... உன்னோடை கதைச்சுவிட்டுத்தான் போறாவோ...

சிவசண்முகம் : (கதிரையிலிருந்து எழுந்து )
ஓம் மாமி, பள்ளிக்கூடத்தைப் பற்றிக் கதைச்ச நாங்கள்... ஏன் மாமி... கண்மணிக்கும வயசாகுது, மாப்பிளை பாருங் கோவன்... கண்மணி உத்தியோகம் பார்க்கிறதாலை உத்தியோக மாப்பிளை ஆரும் விரும்பி வருவினம்...

தவமணி : உத்தியோகமுள்ள பெம்பிளையும் சொத்துதானெண்டு ஆர்அப்பு அதெல்லாம் பார்க்கினம்... சின்ன உத்தி யோகத்தரும் கொழுத்த சீதனம் கேட்கினம்... அது சரி, பூமணி எப்பிடி இருக்குது... அதுக்கும் மாப்பிள்ளை பார்க்கத்தானே வேணும்...

சிவசண்முகம் : அதுக்கென்ன இப்ப அவசரம் மாமி வயசு கிடக்குத் தானே.. நல்ல நிலவரம் ஒன்று நான் கோலீட்டால் எங்கையாவது பார்த்து முடிச்சுப்போடலாம்

தவமணி : பார்க்க மேய்க்க ஆர் இருக்கினம்.... கண்மணிக்கு முப்பது வயசெண்டால், நீ ஐந்து வயசு மூப்பெல்லே.... பாழாப் போன சுனாமி வந்து அண்ணையையும் அண்ணன் பெண் சாதியையும் கொண்டு போகாட்டில் நீங்கள் ஏன் இப்பிடி அனாதையா நிக்கிறியள்....

சிவசண்முகம் : போனதைக் கதைச்சு என்ன பிரயோசனம் மாமி... இனி நடக்கப்போறதைத்தான் பார்க்கவேணும்.

தவமணி: அதுசரி, ஏன் வந்தனி அப்பு... இப்ப என்ன செய்யிறதாய் உத்தேசம்...

சிவசண்முகம்: நெடுகக் கூலிக்குக் கொத்தப்போக முடியுமே மாமி.. குத்தகைக்கு எண்டாலும் தறை ஒண்டு கிடைச்சால் சொந்தமாய் பயிர் செய்யலாம். (தயங்குகிறான்)

தவமணி : ஏன் தயங்கிறாய் அப்பு... சொல்லன் என்னெண்டு

சிவசண்முகம்: உங்கடை தறை ஒண்டு பயிர் செய்யாமல் இருக்குத்தானே மாமி.... உங்களுக்கு பயிர் செய்யிற யோசனை இல்லை யென்டால் அதை எனக்கு குத்தகைக்கு தாருங்கோவன்...

தவமணி : அதை எடுத்து என்ன செய்யப்போகிறாய் அப்பன்... அது பயிர் செய்யாமல் கனகாலமாய் தரிசு நிலமாக் கிடக்கு... நிலமெல்லாம் பாளம் பாளமாய் வெடிச்சுக் கிடக்குது.

சிவசண்முகம்: முயற்சித்துப்பார்ப்பம் மாமி அந்தத் தறைக்குள்ளை

தூர்ந்து போன கிணறு ஒன்று இருக்குத்தானே... அதையும் தோண்டி எடுத்து மிசின் ஒன்று வைச்சு இறைச்சுப் பார்ப்பம்...

தவமணி : நான் பின்னேரம் மாமா வந்தாப்பிறகு கதைச்சுப்போட்டுச் சொல்லுகிறன். பிறகு வாவன்.

சிவசண்முகம் : (போகத்திரும்பியபடி) ஓம்மாமி போயிட்டு பொழுதுபட வாறன்

தவமணி: பொறணை அப்பு.... கதையில மறந்திட்டன், தேத்தண்ணி கொண்டாறன்...

சிவசண்முகம்: வேண்டாம் மாமி... பூமணி தந்த தேத்தண்ணியைக் குடிச்சுட்டுத்தான் வெளிக்கிட்டு வந்த நான்.
(சிவசண்முகம் போகின்றான்)
(தவமணி தனக்குத்தானே சொல்லிக் கொள்கிறார்.)

தவமணி : நான் என்ன செய்வன் அப்பு.... தாயைத் தேப்பனைத் திண்டுட்டு நிக்கிறியள்..... அவை இருக்கேக்கையே கண்மணியை உனக்கு கட்டிவைக்கலாம் எண்டுதான் முயன்று பார்த்தன்.... பட்டதாரியான கண்மணிக்கு பொருத்தமில்லை என்று நீதான் மறுத்துப் போட்டாய்... இப்ப அவளுக்கு ஒரு உத்தியோகமும் கிடைச்சிட்டுது. இனி உன்ரை மாமாவோ, இந்த ஊர் உலகமோ கண் மணிக்கு உன்னைக் கட்டிவைக்கவிடப்போகுதோ அல்லது நீதான் சம்மதிக்கப்போறியே.
(விசித்துக் கொண்டே தவமணி உள்ளே போகிறாள்)
(சிவரஞ்சினி ராகத்தில் வயலின் இசைக்கிறது)
(தீபன் மேசையடிக்கு வந்து படிக்கின்றான்)
(செல்வராசாவும் மணியமும் கீழ் இடதால் பிரவேசிக் கின்றனர்)

செல்வராசா : (உள்ளே பார்த்துக் கூப்பிடுகிறார்) இஞ்ஞாரப்பா, மணியம் அண்ணை ஒரு நல்ல சேதியோடை வந்திருக்கு... ஒரு கதிரை கொண்டு வந்துபோடப்பா...
(தவமணி கதிரையுடன் வருகிறார்.)

செல்லவராசா : இன்னும் ஒரு கதிரை போட்டிட்டு, உன்ரை அப்புவைக் கூட்டிக்கொண்டு வந்து அந்தக் கதிரையிலை இருத்து...

(கதிரையைக் கொண்டு வந்து வைத்துவிட்டு, மேல் இடதில் சாக்குக் கட்டிலில் படுத்திருந்த, முதியவரான தன் தந்தையைக் கைத்தாங்கலாக அழைத்துவந்து கதிரையில் தவமணி இருத்துகிறாள்.)

செல்வராசா : மாப்பிளை வீட்டுக்காரருக்கு கண்மணியைப் பிடிச்சிருக் காம்.... கண்டிருக்கினமாம்.. மணியம் அண்ணையட்டை சொன்னவை.... வீடு இப்ப எழுதாட்டாலும் பரவாயில்லை யாம்... சீதனத்திலைதான் சொன்ன கணக்கிலையிருந்து இறங்காயினமாம்...

மணியம் : அது ஞாயம் தானே பிள்ளை ... உத்தியோகம் பார்க் கிறவை சீதன பாதனம் வாங்கி கொஞ்சம் சொகுசா இருக்கத்தான் பார்ப்பினம்...

தவமணி : அதுக்கு உவ்வளவு சீதனத்துக்கு நாங்கள் எங்கை போறது... எங்கடை நிலைமை உங்களுக்குத் தெரியுந்தானே மணியம் அண்ணை....

மணியம் : அவை என்ன கனக்கக் கேட்கினமே... கண்மணியின்ரை உத்தியோகத்தை மதிச்சுத்தான் உந்தக்காசு... இல்லாட்டில் கூடத்தான் கேட்பினம்... வலிய வாற சீதேவியைக் காலாலை உதைக்கக் கூடாது பிள்ளை...

தவமணி : எனக்கென்ன அண்ணை விருப்பமில்லாமலே... இப்ப அவை வீடு வேண்டாமென்டாலும் பிறகு கேட்காமல் விடப்போகினமே... என்ரை பிள்ளையை மூக்கிலை மின்னி இல்லாமல் விடேலுமே... வீட்டு ஆம்பிளையள் இதையெல்லாம் யோசிச்சா நான் ஏன் கவலைப்படுறன்....

செல்வராசா : உனக்கு என்னைக் குறை சொல்லாட்டில் இருக்கேலாது... நானும் எல்லாத்தையும் யோசிச்சுத்தான் வைச்சிருக் கிறன்.... என்ரை பேச்சை ஆரும் கேட்டால் தானே...

மணியம் : நல்ல கருமஞ்செய்ய இருக்கேக்கை உங்களுக்குள்ளை சண்டை போடாதேங்கோ...

செல்வராசா : மணியம் அண்ணை என்ன தரகரே... எங்களிலை பரிதாபப்பட்டுத்தானே “பாங்” மாப்பிளையைப் பேசி முடிச்சுக்கொண்டு வந்திருக்கிறார்...

தவமணி : இப்பத்தானே ஆறுமாசமா என்ரை பிள்ளை உத்தியோகம் பார்க்குதண்ணை... அதுக்குக் குடுத்துவிட என்னட்டை என்ன கிடக்கு...

மணியம் : என்ன செய்யிறது... உத்தியோகம் பார்த்தாலும் பெம் பிளைப் பிள்ளையைக் கட்டிக் கொடுக்கத்தானே வேணும்...

தவமணி: மணியம் அண்ணையின்ரை குத்தல் கதையைப் பாருங்கோவன்... எனக்கென்ன பெம்பிளைப்பிள்ளை யைக் கொண்டு உழைச்சுத்தின்ன விருப்பமே... சீதனம் குடுக்க என்ன வக்கிருக்கெண்டு ஆம்பிளையள் யோசிச்சாத்தானே...

(கண்மணி கீழ் இடதால் பிரவேசிக்க இருந்தவள், இவர்களின் கதையைக் கேட்டுவிட்டு, வெளியிலேயே நிற்கிறாள்.)

செல்வராசா : ஆக்களுக்கு முன்னாலை என்னைச் சீலை உரியிற தெண்டு தான் நிற்கிறாய்.... இந்த வீட்டிலை நான் ஆரோடை ஆரப்பூரப் பேசிறது....

தவமணி : எந்த நேரமும் பூசிக்கொண்டு வந்து நிண்டால் பிள்ளையள் கூட கிட்ட வருங்களே....

செல்வராசா : ஓ, நான் குடிக்கிற நான் தான் ... என்ரை கவலையை மறக்கக் குடிக்கிறநான்தான்....

தவமணி: இவருக்குத்தான் கண்டறியாத கவலை...

செல்வராசா: நீ வக்கணையாய் பேசி என்னைத்தான் இழுக்கிறாய்... மணியம் அண்ணை வந்த விசயத்தைக் கேளாமல் எல்லாத்தையும் விட்டிட்டு அப்பம் தட்டிக் கூழாக்கப் பார்க்கிறாய்....

தவமணி : நான் தான் எல்லாத்தையும் குழப்புறன்... அப்பிடியெண்டா சீதனத்துக்கும் கலியாணச் செலவுக்கும் வழி சொல்லுங் கோவன்...

செல்வராசா : அதுக்குமொரு வழி செய்து போட்டுத்தான் வந்திருக் கிறன்... மணியம் அண்ணையைக் கேட்டுப் பாரன்...

மணியம் : பிள்ளை.... இதெல்லாம் எல்லா வீட்டிலையும் நடக்கிற சங்கதிதான் பிள்ளை... உன்ரை புருசனுக்கு குடும்பத் திலை அக்கறை இல்லையெண்டு சொல்லாதை... செல்வராசா தான் இப்ப ஒரு வழியும் சொல்லுது....

தவமணி: நீட்டிமுழக்காமல் என்னெண்டு சொல்லுங்கோவன்....

செல்வராசா : இப்ப எங்கடை தறை ஒரு பிரயோசனமுமில்லாமல் சும்மா தானே கிடக்கு.... அதுக்கு நல்ல விலை வருமெண்டால் வித்துப்போட்டு எல்லாப் பிரச்சினையையும் தீர்த்துப் போடலாம்....

மணியம் : ஓம், பிள்ளை.... கொஞ்சம் நியாயமான விலைக்குக் குடுக்கலாம் போலை கிடக்கு... ஓராளட்டை பேசிப்பார்த் திட்டன்... சும்மா இருக்கிற தறைதானே பிள்ளை...

தவமணி : எனக்கு அந்தக் காணித்துண்டொண்டுதானே கிடக் கண்ணை... அதுவும் ஐயான்ரை முதிசக்காணி... ஐயா சம்மதிச்சாத்தான் விக்கலாம்....

செல்வராசா: சும்மா கிடக்கிற நிலம்தானே.... இப்ப விட்டிட்டால் பிறகு விக்கேலாது... உன்ரை ஐயாவைக் கேட்டுப்பாரன்...

வயிரவி : (மூச்சிழுத்து, விட்டு விட்டு ஆறுதலாகப் பேசுகிறார்.) பொடியா, மணியம்... இந்தக் காணி என்ரை அப்புவின்ரை

சொத்து... கவனியாமல் விட்டாப்பிறகுதான் தரிசாய்க் கிடக்கு... நாங்களெல்லாம் நல்லாப் பயிர் செய்த நிலம்... இப்பவும் நிலத்தைக் கொத்திப் பசளைபோட்டு பண் படுத்தீட்டால்.... தங்கமாய்க் கொட்டும்....

தவமணி : இப்பதான் ஞபாகத்துக்கு வருது... காலமை சண்முகம் தம்பி இங்கை வந்துது... எங்கடை தறையைக் குத்தகைக்குத் தரட்டாம்... தான் இந்தப் போகத்துக்குப் பயிர் செய்யப்போகுதாம்....

மணியம் : என்ன பிள்ளை, தறையைப் பாராமல் சிவசண்முகம் குத்தகைக்குக் கேட்டவனே.... தண்ணி இல்லாமல் பாளம் பாளமாய் நிலமெல்லாம் வெடிச்சு தரவையாய்க் கிடக்கு....

செல்வராசா: உதெல்லாத்தையும் விட்டிட்டு காணியை விக்கிற வழியைப் பார்க்கவேணும்... இல்லாட்டில் கண்மணி யின்ரை கலியாணம் தான் குழம்பிப்போகும்...

வயிரவி : நான் கையெழுத்து வைக்க மாட்டான்... இது முதிசக் காணி... முறையாப்பார்க்கப்போனால் ஆண் சந்ததியிலை என்ரை பேரன் சண்முகத்துக்குத்தான் சேரோணும்... குத்தகைக்குப் பயிர் செய்யப்போறனெண்டு சண்முகம் கேட்டால் குடுக்கத்தான் வேணும்...

செல்வராசா : இது என்ன புதுக்கதையாக் கிடக்கு... பேரன்ரை நினைப் போடையே எங்களோடை இருந்தவர்... பேரனுக்கே கண்மணியைக் கட்டிக் குடுங்கோவன் எண்டு சொன்னா லும் சொல்லுவர்... சண்முகம் என்ன என்ரை பிள்ளையின்ரை படிப்பளவுக்குப் படிச்சவனே...
(தீபன் தலையைப் பிய்த்துக்கொண்டு மேசையில் படுக்கிறான்.)

தவமணி: தேவையில்லாத கதை எல்லாம் வேண்டாம் அப்பா... சண்முகம் என்ன படியாத பிள்ளையே ... ஏ.எல் படிச்சிட்டு வேலை கிடையாமல் குடும்பக் கஷ்டத்தைப் பார்த்திட்டு தோட்டம் கொத்தப்போயிட்டுது.... வெளிவாரியாப் படிச்சிருந்தாலும் அதுவும் இப்ப கண்மணியைப் போல பட்டதாரியா வந்திருக்கும்...

செல்வராசா: பொறு, பொறு.... போகிற போக்கைப் பார்த்தா சண்முகத்தைத்தான் கண்மணிக்குக் கட்டிவையுங்கோ எண்டு நீயும் சொல்லுவாய் போலை கிடக்கு....

தவமணி : என்ரை அண்ணரின்ரை பிள்ளையைச் செய்தால் எனக்குச் சந்தோசந்தானே... ஆனா, சண்முகந் தம்பி எப்பவோ சொல்லிப்போட்டுது... கண்மணிக்கு தான் பொருத்த மில்லையாம்... கண்மணிக்குப் பொருத்தமா உத்தி யோக மாப்பிளையாப் பார்த்துக் கட்டிவையுங்கோ எண்டுதான் சண்முகம்தம்பியும் சொல்லுது.

மணியம் : (எழுந்து நின்று கொண்டு) எல்லாரும் பொறுங்கோ... நான் உங்கடை குடும்பக் கதைக்குள்ளை தலையிட வரேல்லை.. உங்கடை நன்மைக்குத் தான் நான் எல்லாஞ் செய் யிறன்... காணியோ கலியாணமோ என்டு யோசிச்சு வையுங்கோ.. நான் நாளைக்கு வாறன்.. .
(மணியம் போகிறார்.)
(மேல் ஸ்தாயியில் சிவரஞ்சனி ராகத்தில் வயலின் இசைக்கிறது.)
(மணியம் போனதும் கண்மணி உள்ளே வருகிறாள்)

கண்மணி : (தீபன் மேசையில் படுத்திடுப்பதைப் பார்த்து விட்டு ) ஏன் தம்பி படிக்கேல்லை... எழும்பிப் படியுங்கோவன், அப்பன்... நாளைக்குச் சோதினை எல்லே...

தீபன் : ஒண்டும் மண்டைக்குள்ளை ஏறுதில்லை அக்கா... எல்லாம் ஒரே குழப்பமாக் கிடக்கு...

கண்மணி : (தம்பியின் தலையைத் தடவியபடியே அழைத்துக் கொண்டு மத்தியமத்திக்கு வந்து தாயைப் பார்த்துச் சொல்கிறாள்)
குழப்பம் ஒண்டும் வேண்டாம்... நான் முடிவெடுத்திட்டன்.. நான் இவ்வளவு நேரமும் வாசலோரமாய் நின்று நீங்கள் கதைச்சதெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தநான்.... எனக்குக் குடிகார உத்தியோக மாப்பிள்ளை வேண்டாம்... எனக்கு சிவசண்முகம் அத்தானைக் கட்டி வையுங்கோ, எங்கடை குடும்ப உறவும் தழைக்கும்...

தீபன் : (மலர்ச்சியுடன்) உண்மையாத்தான் சொல்லுறியளே அக்கா... சண்முகம் அத்தானைக் கட்ட உங்களுக்கு விருப்பமே...

கண்மணி : ஓம், உறுதியாத்தான் சொல்லுறன்... அவரும் படிச்சவர் தான்... வெளிவாரியாப் படிச்சு முடிச்சால் அவரும் பட்டதாரியா வருவார்... அவருக்கும் உத்தியோகம் கிடைக்கும்... உத்தியோகம் கிடைக்காட்டலும் நான் கவலைப்பட மாட்டான்.... அவர் நல்ல உழைப்பாளி... நீங்கள் ஓடிப்போய் சந்தோசமாய்ப் படியுங்கோ அப்பன்... இந்த வீட்டிலை இப்ப சந்தோசம் தான் வேணும்....
(தீபன் ஓடிப்போய், மேசைக்கு முன்னால், கதிரையில் அமர்ந்து, சந்தோசமாகப் படிக்கத் தொடங்குகிறான்.)
(செல்வராசா திகைப்புடன் மகளைப்பார்த்துக்கொண்டு நிற்க, தவமணியும் வயிரவிக் கிழவனும் கண்மணியைப் பார்த்து முகம் மலர்கின்றனர்)
(கல்யாணி ராகத்தில் வயலின் இசை ஒலிக்கத் தொடங்கு கையில், கண்மணி உள்ளே செல்லத் திரும்புகிறாள். வெளியிலிருந்து சண்முகத்தின் குரல் கேட்கிறது.)

சிவசண்முகம் : மாமி... மாமி...

தவமணி: சண்முகம் தம்பி போலை கிடக்கு...
(சிவசண்முகம் உள்ளே வருகிறான்)

செல்வராசா: (மலர்ச்சியுடன்) சண்முகம் தம்பியே! உள்ளுக்கை வாருங்கோ, தம்பி... நல்ல விசயமொண்டு பேசவேணும்...
(தீபன் துள்ளிக் கொண்டு சிவசண்முகம் நிற்கும் இடத்துக்கு வந்து, அவனின் கையைப் பிடித்துக் கொண்டு நிற்கிறான்.)
(செல்வராசாவின் மாற்றத்தைக் கண்டு, வயிரவிக் கிழவனும் தவமணியும் கண்கள் விரிய செல்வ ராசாவையே பார்த்துக்கொண்டு நிற்கின்றனர்.)
(கண்மணி சிறிது திரும்பி, சிவசண்முகத்தின் முகத்தை நோக்கிவிட்டு, வெட்கப்பட்டுக் கொண்டு தலை குனிகிறாள்.)
(எல்லோரும் உறை நிலையில் நிற்கையில், வயலின் கல்யாணி ராகத்தில் துரிதமாக இசைபொழிகிறது)

***

# தந்திரபூமி

- சிறுவர் நாடகம் -

**பாத்திரங்கள் :**

உரைஞன் 1
உரைஞன் 2
சிங்கம்
மான்
நரி
முயல்
கரடி
ஒட்டகச் சிவிங்கி
யானை
கிழட்டுச் சிங்கம்

(அரங்கில் மங்கலான ஒளி பரவியிருக்கிது. மிருகங்களின் வேட உடை தரித்த சிறுவர்கள் அரங்கில் நடமாடுவது தெரிகிறது. பின்னணியில் வயலினில் ரஞ்சனி ராகம் இசைக்கப்படுகிறது. அரங்கில் ஒளியின் அளவு கூடிக் கொண்டே செல்கிறது.)

(இரு சிறுவர்கள் வேட்டி, சேர்ட் அணிந்து உரைஞர்களாக முன் அரங்கிற்கு வருகிறார்கள்.))

உரைஞன் 1: (பாடல்)
வாங்க ஐயா வாங்க
வாங்க அம்மா வாங்க
சிறுவர் நாம் ஒன்று கூடி
கதை ஒன்று சொல்ல வந்தோம்

உரைஞன் 2 : (பாடல்)
வாங்க மக்காள் வாங்க
வாங்க மக்காள் வாங்க
சிறுவர் நாம் சேர்ந்து இங்கே
நடிப்புடன் கதை சொல்வோமே

உரைஞன் 1 : (பாடல்)
ஏட்டின் எழுத்தறியோம்
பாட்டின் பொருளறியோம்
ஆனாலும் ஒன்று கூடி
நாடகத்தை நடிக்க வந்தோம்

உரைஞன் 2 : (பாடல்)
பாலர் என்று எண்ண வேண்டாம்
பாவம் என்றும் தள்ள வேண்டாம்
நாட்டுக்கு நல்லது சொல்வோம்
பாட்டுடனே கதையும் சொல்வோம்

இருவரும் : வாங்க மக்காள் வாங்க
வாங்க மக்காள் வாங்க
நாட்டுக்கு நல்லது சொல்வோம்
நாடகத்தில் பாடமும் கற்போம்

உரைஞன் 1 : என்ன நல்லா யோசிக்கிறியள்?

உரைஞன் 2 : என்னவாயிருக்கும் என்று பார்க்கிறியள்.

இருவரும் : நாங்கள் சிறுவர்தான். ஆனால் நல்ல செய்தி சொல்லப்போறம்.
உன்னிப்பாய்க் கவனியுங்கோ.

(அரங்கிலுள்ள வேட உடை தரித்தவர்களைப் பார்த்து)

மேடையிலை நடந்தது போதும். உசாராகுங்கோ.
நாங்கள் ஆரம்பிப்போம்.

(ஹார்மோனியத்தில் "வாங்க மக்காள் வாங்க" இசைக்கப் படுகிறது)

(கூட்டம் கூட்டமாக விலங்குகளும் பறவைகளும் பாடி ஆடுகின்றன)

பாடல் : ஆனந்தம் ஆனந்தமே எங்கும்
ஆனந்தம் ஆனந்தமே

பேரின்பம் பேரின்பம்
மனம் மகிழ்ந்திடுதே
சீரிளம் காற்றினில்
சுகமொன்று பேசுதே

(பறை முழங்குகிறது. விலங்குகள், பறவைகள் யாவும் ஓடி ஒளிக்கின்றன.)

(சிங்கம் ஒன்று அரங்கின் மத்திக்கு வருகின்றது)

சிங்கம் : (பாடல்)
ராஜா வந்தேனே சிங்கார
ராஜா வந்தேனே

எட்டுத் திசை எங்கும்
கோலோச்சும் நாயகன்
தந்திரம் சூழ்ச்சியால்
காட்டையும் ஆள்பவன்

(எட்டுப்போட்டு ஆடுதல்)

ராஜா வந்தேனே சிங்கார
ராஜா வந்தேனே.

சிங்கம் : என்னது? ஒருத்தரையும் காணேல்லை.
எங்கையும் போய் ஒளிச்சிட்டினமோ?

(ஒரு மரத்தின் பின்னாலிருந்து மான் ஒன்று எட்டிப் பார்க்கிறது)

சிங்கம் : மானார், இஞ்சை வாரும்

(மான் ஒளிந்து கொள்கிறது)

சிங்கம் : மானார், உம்மைத்தான் கூப்பிடுறன்.
ஒளிக்க வேண்டாம். இஞ்சை வாரும்

(மான் தயங்கியபடியே வருகிறது)

சிங்கம் : என்ன மானார், என்னைக் கண்டால் பயமே?
ஓடி ஒளியுறீர்

(மான் ஒன்றும் பேசாமல் நிற்கின்றது)

சிங்கம் : ஏன், என்ரை ஆட்சியிலை ஏதும் குறையே?
உங்களுக்கு நல்ல சுதந்திரம் தானே குடுத்திருக்கிறன்.
என்னைக் கண்டால் ஓடி ஒளியுறியள்.

மான் : சேச்சே! ஆர் அப்பிடிச் சொன்னது?
நாங்கள் நல்லாத்தான் இருக்கிறம்.

சிங்கம் : அது தானே பார்த்தன்.
யாரும் குறை சொல்ல முடியுமே.

சிங்கம் : (பாடல்)
காட்டிலே வளமெல்லாம் கொழித்திடச் செய்குவேன்
இந்திரலோகமாய் இக் காட்டையே மாற்றுவேன்

ராஜா வந்தேனே சிங்கார
ராஜா வந்தேனே.

(வட்டம், எட்டு போட்டு ஆடுதல்)

(அந்த இடத்திற்குத் திடீரென வந்த நரியொன்று சிங்கத்தைக் கண்டதும் தயங்கி நிற்கிறது)

சிங்கம் : நரியார்! என்ன ஒரு மாதிரியா தயங்கி நிற்கிறீர்?
ஏதும் சொல்ல வேணுமே?

நரி : சைச்சை. சொல்லுறதுக்கு என்ன இருக்கு? எல்லாம் சோக்காத்தானே செய்யிறியள். எண்டாலும்.....

சிங்கம் : என்ன இழுக்கிறீர்? எனக்கு உந்த இழுவை தான் பிடிக் கிறேல்லை. ஏன் என்னிலை ஆரும் குறை சொல்லீனமே.

நரி : இல்லை... வந்து....

சிங்கம் : என்ன பிறகும் இழுவையாக் கிடக்கு. சொல்ல வந்ததைச் சொல்லுமன்.

நரி : அதொண்டும் இல்லை. ஒரு சிலர் குறை சொல்லத்தானே செய்வினம். நீங்கள் அதைக் கண்டு கொள்ளாதேங்கோ.

சிங்கம் : என்னடா?

சிங்கம் : (பாடல்)
என்ன வார்த்தை சொன்னாயடா
மூடனே பேடியே என்னையும் மதித்திடாமல்

என்ன வார்த்தை சொன்னாயடா.

அதிகாரம் எவர்க்கேதடா எனைக்
குறை சொல்லத் தகுமோ அடா
சதிகாரன் நீயடா உன்
கபடம் நானும் அறிகுவேன்

சிங்கம் : சொல்லடா. உன்னை இப்பிடிச் சொல்லச் சொல்லி ஆரும் உன்னைத் தூண்டி விட்டவையே?

நரி : நான் அப்பிடிச் சொல்லேல்லை. குறை சொல்லுற ஆரும் இருப்பினம் எண்டுதான் சொன்னான்.

சிங்கம் : அப்பிடிச் சொல்லு. நான் உங்களுக்காக எத்தனையெல்லாம் செய்திருக்கிறன். அதை நினைச்சுப் பார்க் கிறேலையே.

(சிங்கம் ஆடிப் பாடிக்கொண்டே செல்கிறது)

சிங்கம் : (பாடல்)
ராஜா நானடா சிங்கார
ராஜா நானடா.

(விலங்குகள் எல்லாம் கூடி இருக்கின்றன)

மான் : (பாடல்)
ஐயோ, நாம் என் செய்வோம் - இங்கே
ஐயோ நாம் என் செய்வோம்.

ஆடிப் பாடிட சுதந்திரமில்லை
கூடிக்குலாவிட வழியும் இல்லை
அதட்டிவிரட்டிடும் சிங்கத்தினாலே
சிதறிப் போனதே எம் வன வாழ்க்கை

முயல் : மானார். நாங்கள் இங்கை ஏன் கூடி இருக்கிறம், அதுக்கு ஒரு வழி காணத்தானே. சும்மா அழுது புலம்பிக் கொண்டிருக்கிறீர்.

கரடி : நாங்கள் முதலிலை இந்தச் சிங்கத்தின்ரை நட மாட்டத்தைக் கட்டுப்படுத்த வேணும். அவரும் அவரின் குடும்பமும் வெளியிலை வராதபடி பார்த்துக் கொள்ள வேணும்.

நரி : அதுக்கு எங்களிலை ஒரு தலைவரை நாங்கள் தெரிய வேணும். அப்பதானே நாங்கள் ஒரு கட்டுக் கோப்புக் குள்ளை இருக்கலாம்.

ஒட்டகச்சிவிங்கி: தலைவரைத் தெரியிறதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். முதல்லை சிங்கத்தாருடைய நடமாட்டத்தை எப்படித் தடுக்கலாம் எண்டு யோசியுங்கோ.

நரி : நாங்கள் எல்லாரும் சிங்கராசாவின்ரை குகையை முற்றுகையிட்டம் எண்டால் அவராலை ஒண்டுஞ் செய்யேலாது.

முயல் : அது நல்ல யோசினை தான். அப்பிடியெண்டால் நாளை இரவே எல்லோரும் சேர்ந்து முற்றுகையிடலாம்.

மற்றையவை : ஓம், ஓம். நல்லயோசினை. நாங்கள் முற்றுகையிடுவம், முற்றுகையிடுவம்.

(எல்லோரும் கலைகிறார்கள்)
(கிழட்டுச் சிங்கமொன்று, ஒரு குகையின் முன்னால் படுத்திருக்கிறது)

நரி வருகிறது.

நரி : சிங்கராசா, சிங்கராசா!

கிழட்டுச்சிங்கம் :ஆர் அது, என்னை சிங்கராசா என்று கூப்பிடுறது?

நரி : அது நான் தான் நரியார். சிங்கராசா.

கிழட்டுச்சிங்கம் :என்ன அதிசயமாய் இருக்கு. நீங்கள் எல்லாரும் என்னைத் திரும்பிப் பார்க்கிறதே இல்லை.

நரி : இல்லை ராசா. நான் ஒரு அலுவலாத்தான் வந்திருக்கிறன். எங்கடை ஆட்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து இப்ப இருக்கிற சிங்கராசாவின்ரை இடத்தை முற்றுகை இடப் போகினம். அவர் கலைக்கப்பட்டால் நீங்கள் தானே இனி ராசா.

கிழட்டுச் சிங்கம் :ஆனால் அவையள் என்னை ஏற்றுக் கொள்ளுவினமே. அவையளுக்கை ஆரையும் தலைவராத் தெரியலாம் தானே.

நரி : அவையளுக்குள்ளை தலைவரா வாற துணிச்சல் ஒருத்தருக்கும் இல்லை. நான் இருக்கிறன் தானே ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ.

கிழட்டுச் சிங்கம் : சரி, சரி. ராசா நானெண்டா நீர் தான் என் மந்திரி மாதிரி. ஆனால் கொஞ்ச நாளைக்கு முற்றுகையிட்டு வெருட்டி விட்டு ஒரு பக்கத்தாலை வழி திறந்தாத்தான் இப்ப ராசாவா இருக்கிறவர் வேறை காட்டுக்கு ஓடிப்போவார்.

நரி : உந்தத்திட்டத்தை நான் யோசிச்சுத்தான் வைச்சிருக் கிறன். நீங்கள் ஒருமுறை என்னோடை கூட வந்து முற்றுகையிட்டிருக்கிற இடத்துக்குப் போனமெண்டா அவையளோடை கதைச்சு நாங்கள் அவையளைத் திசை திருப்பி உங்களை ராசாவாக ஏற்றுக்கொள்ளச் செய்யலாம்.

கிழட்டுச்சிங்கம் :நீர் சரியான ஆள்தான். நீர் என் கூட இருந்தால் எல்லாத்தையும் சாதிச்சிடலாம். எங்கடை தந்திரம் பலிக்கும்.

நரி : ஓம், ராசா. நாங்கள் இப்பவே போவம்.

(சிங்கம் தள்ளாடியபடியே எழுந்து நிற்கிறது)

கிழட்டுச் சிங்கம் : (பாடல்)

ராஜ ராஜ ராஜ ராஜ
ராஜன் நான் தானே- இங்கே

ஏக போக சுகம் அனுபவிக்க
நானும் வந்தேனே.

(இருவரும் போகிறார்கள்)

விலங்குகள் யாவும் ஒரு வட்டவில் வடிவ ஒழுங்கில் கூடி நிற்கின்றன. எல்லோரும் கோஷம் எழுப்புகிறார்கள்.

முயல் : விடமாட்டோம் விடமாட்டோம்
இனியும் விடமாட்டோம்

எல்லோரும் : விடமாட்டோம் விடமாட்டோம்
இனியும் விட மாட்டோம்

முயல் : ராசாவா இருந்தது போதும்
ஓடிப்போ ஓடிப்போ

முயல் : இனியும் எமை அடக்க

எல்லோரும் : விடமாட்டோம் விடமாட்டோம்

முயல் : ஏகபோக சுகம் அனுபவிக்க

எல்லோரும் : விடமாட்டோம் விடமாட்டோம்.

(நரி வருகிறது)

நரி : விடமாட்டோம் விடமாட்டோம்
இனியும் விடமாட்டோம்

எல்லோரும் : விடமாட்டோம் விடமாட்டோம்
இனியும் விடமாட்டோம்

நரி : சரி, சரி. நான் ஒண்டு சொல்லுறன், கேளுங்கோ.

மான் : என்ன சொல்லப் போறீர்? நாங்கள் இங்கை கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறம், நீர் எங்கை போயிட்டு வாறீர்?

நரி : நான் ஒரு அலுவலா, கொஞ்சம் தூரப்போயிட்டு வாறன். எல்லாம் உங்களுக்காகத்தான்.

முயல் : எங்களுக்காகவோ? என்ன விறிசு விடுறீர்?

நரி : ஓம், எங்கள் நன்மைக்காகத்தான், நான் ஒருவரோடை ஆலோசிச்சுப் போட்டு வாறன்.

மான் : அதென்ன எண்டு தான் சொல்லுமன்.

நரி : எல்லாம் பிறகு சொல்லிறன். இப்ப ஒரு விசயம் நாங்கள் கவனத்திலை கொள்ள வேணும்.

எல்லோரும் : என்ன, என்ன?

நரி : நீங்கள் உப்பிடியே வட்டமாக முற்றுகையிட்டு சிங்க ராசாவை வளைச்சுப் போட்டியள். எத்தனை நாளைக்குத் தான் நீங்களும் உப்பிடியே நிண்டு சிங்கராசாவும் அடை பட்டுக் கிடக்கிறது? ஏதாவதொரு பக்கத்திலை வழியைத் திறந்து விடுங்கோவன். அவர் வேறெந்தக் காட்டுக்காவது ஓடிப்போகட்டும்.

முயல் : அதுவும் சரி தான். மேற்குப் பக்கத்தாலை திறந்து விடுவம். அவர் ஓடிப்போகட்டும்.

(வழிவிட்டு சில மிருகங்கள் ஒதுங்குகின்றன)

(முயல் கோஷம் எழுப்புகிறது)

முயல் : பிளைச்சுப்போ பிளைச்சுப்போ
வேறெங்காவது தப்பிப்போ

நரி : வழி திறந்திருக்கு வழி திறந்திருக்கு
ஓடிப்போ ஓடிப்போ.

(சிங்கம் பின்புறத்திலிருந்து ஓடிவந்து திறந்திருந்த வழியினூடாகத் தப்பிச் செல்கிறது)

முயல் + நரி : ஓடுறார் ஓடுறார்
தலை தெறிக்க ஓடுறார்.

எல்லோரும் : ஓடுறார் ஓடுறார்.
திரும்பிப்பாராமல் ஓடுறார்

நரி : சரி, இப்ப எங்கடை முக்கிய பிரச்சினை முடிஞ்சுது. எல்லாரும் சேர்ந்து ஒரு மாதிரி ராசாவைக் கலைச்சுப் போட்டம். இனித்தான் எங்களுக்கு ஒரு முக்கியமான பொறுப்பிருக்கு.

எல்லோரும் : அப்பிடி என்ன இருக்கு?

நரி : என்ன மறந்து போனியளே? எப்பிடி எண்டாலும் எங்களுக்கொரு தலைவர் வேணும் தானே.

முயல் : அதை ஆர் இல்லை எண்டு சொன்னது. நாங்கள் எல்லாரும் இப்ப இங்கை கூடியிருக்கிறம். இப்பவே ஒரு தலைவரைத் தெரிவு செய்வம்.

நரி : எல்லோரும் கிட்ட வாங்கோ. நீங்கள் எல்லோரும் சேர்ந்து ஏக மனதாக ஒரு தலைவரைத் தெரிவு செய்யுங்கோ.

மான் : நான் யானையார் தான் தலைவரா இருக்க வேணும் எண்டு பிரேரிக்கிறன்.

யானை : ஐயோ, என்னை விடுங்கோ. நான் இந்தப் பருத்த உடம்பையும் வைச்சுக்கொண்டு ஓடியாடித் திரியமாட்டன். என்னை விட்டிடுங்கோ.

முயல் : நான் ஒட்டகச் சிவிங்கியார் தான் தலைவராக வரவேணுமெண்டு பிரேரிக்கிறன்.
(ஒட்டகச்சிவிங்கி ஒன்றும் சொல்லால் இருக்கின்றது)

நரி : அவர் ஒண்டும் பேசாமல் இருக்கிறார். அவர் கொஞ்சம் சோம்பல் பிடிச்சவர். வேறை ஆரையெண்டாலும் பாருங்கோவன்.

முயல் : அப்பிடிச் சொல்லக்கூடாது. ஒட்டகச் சிவிங்கியார் நல்ல பொறுமைசாலி. கள்ளத்தனம் ஒண்டும் செய்யமாட்டார். அவர் தான் பொருத்தமானவர்.

நரி : (பதற்றத்துடன்) எவ்வளவு பொறுப்பான பதவி, எவ்வளவு கஷ்டங்களையெல்லாம் எதிர் நோக்க வேண்டியிருக்கும். ஒட்டகச் சிவிங்கியாருக்கு முடியுமே?

ஒட்டகச்சிவிங்கி: என்னை ஏன் இழுக்கிறியள்? ஏன் என்னைப் போட்டடிக் கிறியள், பேசாமல் என்னை விடுங்கோவன்.

நரி : நான் உதுக்குத்தான் சொன்னனான், தலைவர் பொறுப்பு சும்மா இல்லை எண்டு.

முயல் : அப்ப, ஆராவது முன்வந்து தலைவரா வாருங்கோவன்.

(எவரும் முன்வராதிருக்கிறார்கள்)

நரி : நான் நினைச்சன். அப்பவே நினைச்சன். இவை ஒருத்தருக்கும் முதுகெலும்பு இல்லையெண்டு

முயல் : என்ன சொல்லுறீர்? எங்களை எல்லாம் கேவலப்படுத்தா தையும்.

நரி : நான் உங்களைக் கேவலப் படுத்தேல்லை. தலைவர் எண்டா நல்ல கெட்டிக்காரராய் இருக்க வேணும். நல்ல அனுபவசாலியாயும் இருக்க வேணும். அப்படி எங்களுக்கை ஆர் இருக்கினம்?

(எல்லோரும் மௌனமாக இருக்கிறார்கள்)

நரி : எனக்கு நல்லாத் தெரியும், ஒருத்தரும் முன்வரமாட்டின மெண்டு. இதுக்குத்தான் நான் முன்னமே யோசிச்சு வைச்சிருக்கிறன்.

முயல் : என்ன யோசினை எண்டு சொல்லும் பார்ப்பம்.

நரி : எங்களுக்குள்ளை ஒருத்தரும் இல்லை. அது தான் ஒருவரிட்டை எங்களுக்குத் தலைவராய் இருக்கச் சம்மதமோ எண்டு கேட்டு வந்தனான்.

முயல் : அதார் அப்பிடி ஒருத்தர்?

நரி : அவரைக் கூட்டி வந்திருக்கிறன். நல்ல கெட்டிக்காரன். நல்ல அனுபவசாலி. எங்களுக்கு நல்லது தான் செய்வார்.

மான் : அவரைக் கூப்பிடுங்கோ, பார்ப்பம்.

(நரி உள்ளே சென்று கிழட்டுச் சிங்கத்தை அழைத்து வருகிறது)

கிழட்டுச்சிங்கம்: எல்லோருக்கும் வணக்கம். நான் என்ரை பாட்டிலை இருக்க நரியார் தான் வந்து கேட்டவர், கொஞ்ச நாளைக்கெண்டாலும் தலைவரா இருங்கோ எண்டு. அது தான் நான் சம்மதிச்சு வந்தனான்.

எல்லோரும் : இவரோ, இவரோ. உவருக்கு வயசொல்லோ போயிட்டுது.

நரி : இந்த வயசும் ஒரு வயசே. அவரைப் பாருங்கோ எவ்வளவு மிடுக்காக இருக்கிறாரெண்டு.

முயல் : (பாடல்)
என்ன சொல்கிறீர் - நரியாரே
என்ன சொல்கிறீர்

குள்ளத் தனமாகவே இங்கு
கபடமும் செய்ய வந்தீர்

நரி : (பாடல்)
நான் என்ன செய்தேன் - இங்கு வந்து
நான் என்ன செய்தேன்
கள்ளத்தனம் செய்யவில்லை
கபடமும் ஏதுமில்லை

முயல் : (பாடல்)
உள்ளத்தில் உள்ளதெல்லாம்
நாம் அறிவோமே
கள்ளம் இல்லாமலா சிங்கத்தை அழைத்தீர்
வள்ளல் என்றே நீர் உமை நினைத்தீரோ
லாபம் உமக்கில்லாமலா திட்டமிதையும் நீர் வகுத்தீர்
என்ன சொல்கிறீர் -நரியாரே
என்ன சொல்கிறீர்

முயல் : குள்ள நரியாரே, உமது திட்டம் பலிக்காது. இந்தக் கிழட்டுச் சிங்கத்தை எம்மாலை தலைவராய் ஏற்றுக் கொள்ள முடியாது. இவர்களின்ரை கையிலை அதிகாரத்தை இனியும் கொடுக்க முடியாது.

எல்லோரும் : ஆமாம், ஆமாம். அதிகாரத்தைக் கிழட்டுச் சிங்கத்துக்குக் கொடுக்க முடியாது.

நரி : அப்போ நீங்கள் தலைவருக்கு என்ன செய்யப் போறீங்கள்?

முயல் : நாங்களே தலைவராவோம். நாங்களே தலைவராவோம்.

எல்லோரும் : நாங்களே தலைவராவோம், நாங்களே தலைவராவோம்.

முயல் : ஒட்டகச்சிவிங்கியார் நீங்கள் சம்மதம் சொல்லுங்கோ. கொஞ்சக் காலத்துக்குப் பிறகு இன்னொருவரைத் தலைவராக்குவோம். அதுக்குப் பிறகு இன்னொருத்தர்.

எல்லோரும் : அது தான் சரி, அது தான் சரி.

முயல் : எங்கள் தலைவர் ஒட்டகச் சிவிங்கியார் வாழ்க.
ஒட்டகச்சிவிங்கியாரர் வாழ்க.

எல்லோரும் : சிவிங்கியார் வாழ்க! சிவிங்கியார் வாழ்க.

மான் : இந்த நரியார் தந்திரன். இந்தக் கிழட்டுச் சிங்கமும் அவருக்குக் கூட்டாளி. இவரையும் விரட்டவேணும்.

எல்லோரும் : விரட்ட வேணும், விரட்ட வேணும்.

(கிழட்டுச்சிங்கமும் நரியும் ஓட்டமெடுக்கின்றன)

எல்லோரும் : (பாடல்)
உல்லாசமமாக இங்கே ஓடியாடிப் பாடுவோம்
சல்லாபம் செய்தே நாமும் ஆனந்தமே காணுவோம்.
தந்திரம் செய்ய இனி இங்கு இடம் இல்லை
சுந்தரக் காட்டில் எங்கும் பயம் எமக்கில்லை.

லாலலா லாலலா லாலலா
லாலலா லாலலா லாலலா லாலலா

(எல்லோரும் முன் அரங்குக்கு வந்து வணக்கம் செலுத்துகிறார்கள்.)

***

# சதி சுலோசனா

## - இசை நாடகம் -

இராமாயணக் காப்பியத்தில் கிளைக்கதையாக வருவது சதிசுலோசனையின் கதை. ஆதிசேடனின் மகள் சுலோசனைமீது, இலங்காபுரிவேந்தன் இராவணன் மகனான இந்திரஜித்து காதல் கொள்வதுடன் இந்நாடகம் ஆரம்பமாகிறது. இராம – இராவண யுத்தப்பின்னணியில் இக்கதை வளர்த்துச் செல்லப்படுகிறது.

**பாத்திரங்கள்**

1.இந்திரஜித்து
2.சுலோசனை
3.இராமன்
4.இலக்குவன்
5.நாரதர்
6.ஆதிசேஷன்
7.அநுமன்
8.இராவணன்
9.கார்க்கோடன்
10.தட்சகன்
11.விபீஷணன்
12.அங்கதன்

## காட்சி 1

### நாகலோக நந்தவனம்

(இந்திரஜித்து தன் பெருமைகளைச் சொல்லிப் பாடியவண்ணம் வருகிறான்)

பாடல் : “சிதம்பரம் போவேன் நான்” என்ற மெட்டு
ராகம் : பெஹாக்
தாளம் : ஆதி

இந்திரஜித்து : இந்திரஜித்தன் நானே வீர
இலங்காபுரி இளவல் - நானே (இந்திர)
என் பெயர் கேட்டால் அண்டம் நடுங்கும்
பார் புகழ் இராவணன் மைந்தனும் நானே (இந்திர)

வசனம் : இலங்காபுரி ஆளும் இராவணன் மகன் இந்திரஜித்தன் நான். அட்டதிக்குப் பாலர்களையும் மத்திய லோக ராஜர்களை யும் வென்று, இந்த நாகலோகத்துக்குத் திக் விஜயம் செய்துள்ளேன். ஆஹா! என்ன அழகான பூங்கா இது. தேவலோகக் கற்பகச் சோலையிலும் பார்க்க சிறப்பாக இருக்கிறதே...!

பாடல் : (தொடர்ச்சி)
கற்பனைக் கெட்டாத வளம் நிறை பூங்கா
கற்பகச் சோலையும் இதற்கிணை ஆகாதே
அற்புதச் சோலை கண்டேன் - எந்தன்
அகம் மிக மகிழ்வு கொண்டேன் - நானே
(அற்புதச்சோலை)

வசனம் : ம்... என்ன வாசனை. இது எங்கிருந்து வருகிறது?
அதோ அழகுத் தேவதை ஒருத்தி ஆடியபடி வருகிறாளே! என்னே அவள் அழகு! யாரிவள்? ஒளிந்து தான் பார்ப்போமே.

(இந்திரஜித்தன் ஒரு புறத்தே ஒளிந்திருக்க, சுலோசனை பாடியபடி வருகிறாள்)

பாடல் : “தாமரை மாமுக மாதரே” என்ற மெட்டு.

சுலோசனை: மாமலர் சூழுமிந்தப் பூங்கா வனத்தில்
உல்லாசம் கொண்டு நான் ஆடுவேன் பாடுவேன்
(மாமலர்)

ஜாதிமுல்லை கொன்றை மகிழம்
வாச ரோஜா பிச்சி சண்பகம்
(மாமலர்)

வசனம் : இந்தப் பூங்காவனத்தின் வனப்பில் மயங்கி, என் தோழியரைப் பிரிந்து நெடுந்தூரம் வந்து விட்டேனே. பாவம், தேடப் போகிறார்கள். விரைவாக இந்தப் பரிமள சோபித மலர்களைக் கொய்து கொண்டு செல்வோம்.

(இந்திரஜித்தன் வெளிப்படுகிறான்)

இந்திரஜித்தன் : ஆஹா! என்ன அழகி இவள்! தேவலோகப் பெண்களும் இவளுக்கு நிகராகார். இவளைக் கண்டதும் இவள் மீது காதல் பெருகுகிறதே. இவளை எப்படியும் கவர வேண்டும். நான் இவளைக் காணாதது போலவும் இவள் என்னைக் காணும் படியும் நடந்து செல்வோம்.

(சுலோசனை, இந்திரஜித்தனின் கம்பீரத்திலும் தோற்றத்திலும் மயங்குகிறாள்)

சுலோசனை : யார் இவர்? ராஜ கம்பீரன். திவ்ய அலங்கார சுந்தரன். எந்த நாட்டுக்கு இவர் இளவரசரோ? இவரைக் கண்டதுமே என் மனம் இவரை நாடுகிறதே. இது தவறு. நான் நாகலோக இளவரசி. நாக லோக ராஜன் ஆதிசேடனுக்கு ஒரு பூலோகத்தவன் மருமகன் ஆவதா? ஒரு போதும் ஆக முடியாது.

(இந்திரஜித்து, சுலோசனைக்கு முன்னால் வந்து பாடுகிறான்)

பாடல் : “மகா சுகிர்த மோக சுந்தரி” என்ற மெட்டு
ராகம் : காபி

இந்திரஜித்து : மகா சுகிர்த மோக சுந்தரி
வனிதையே புனிதையே மனோகரியே தேவியே (மகா)

சுலோசனை : சரசம் செய்யவோ வந்தனை நீ
மரியாதை தெரியாமல் தனியாக என்னோடு (சரசம்)

இந்திரஜித்து : இலங்கேசன் மகன் நானடி அந்த
லங்காபுரி யுவராஜன்டி
திசை எட்டும் ஜெயம் கொண்ட
இந்திரஜித்தன் நானடி (மகா)

சுலோசனை : அநியாயம் இதுவல்லவோ நான்
நாகலோகக் கன்னி அல்லவோ
புவிபாரம் தாங்கும் தந்தை
ஆதிசேடன் சுலோசனை நான் (சரசம்)

(வசனம்) : உம்முடைய எண்ணம் அறிந்து கொண்டேன். நான் நாகலோக இளவரசி. நீரோ புவியாள் மன்னன் மகன். எம் இருவருக்கும் தான் பொருந்தி வராதே.

இந்திரஜித்து : சுலோசனை! ஓர் அழகான பெண்ணை மனத்தில் வரித்துக் கொண்டால் பெண் கொள்வது இயற்கை தானே. உன் பிதா இந்த நாகலோகம் ஒன்றுக்கே அதிகாரஸ்தன். என் தந்தையோ மூவுலருக்கும் அதிகாரஸ்தன். நான் உன்னைக் காதல் மணஞ் செய்துகொள்ள விரும்புகிறேன்.

சுலோசனை: உமக்கு எப்படி விளங்க வைப்பது என்பது தான் தெரிய வில்லை. என் பெற்றோரைப் பிரிந்து, அவர்கள் சம்மத மில்லாமல் நான் எப்படி வர முடியும். என் தோழியர் வரும் நேரமிது. வீணாக வார்த்தை அளந்து அவமானப்பட்டுக் கொள்ளாதீர்.

இந்திரஜித்து : பெண்ணே! குடும்பம் என்று வந்ததும் தாய், தந்தையரைப் பிரிந்து, கணவன் பின்னால் செல்வது வழமை தானே.

சுலோசனை : அன்பரே! தங்கள் வார்த்தைகளில் மயங்கி நான் தங்களுக்கு அடிமையானேன். நான் உங்களுடனேயே வருகிறேன்.

இந்திரஜித்து : அன்பே! நான் மகிழ்ந்தேன். வா, செல்வோம்.
(போகிறார்கள்)

## காட்சி - 2
## ஆதிசேஷன் தர்பார்

பாடல் :
ராகம் : அடானா

பல்லவி

ஜெகம் புகழும் ஆதிசேஷன் - நான்
நிகரெவரும் இல்லா நாகஸர்ப்ப ராஜன்

அனுபல்லவி

பாற்கடலில் துயில்கொள் ஸ்ரீரங்கநாதனை
பாம்பணையாய்த் தாங்கி துதிசெய்யும் தீரன் (ஜெகம்)

சரணம்

விண்டலமும் மண்டலமும் எண்டிசை அடங்கிலும்
துஷ்டர்களை வதம் செய்யும் பரிபாலன் - நல்ல
நீதி நெறிநின்று வாழும் உலகோர்க்கு
எள்ளளவும் தீது செய்யாக் குணசீலன்

(கார்க்கோடனும் தட்சகனும் வருகிறார்கள்)

கார்க்கோடன்
+ தட்சகன் : வணக்கம், மகராஜ்

ஆதிசேடன் : வாருங்கள், வாருங்கள் கார்க்கோட ராஜனும் தட்சக ராஜனும் என் அரண்மனைக்கு வந்ததற்கு மகிழ்தேன். என்ன காரணமாக வந்தீர்?

கார்க்கோடன் : ஆதிசேஷமகராஜன் அரண்மனைக்கு வருவதற்கு நாம் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

தட்சகன் : சமுத்திர சஞ்சாரம் செய்து வரும் வழியில் நாகலோகத்தில் தங்களைக் கண்டு செல்லலாம் என்று வந்தோம்.

பாடல் : "மந்திரி பவளச்சேனா" என்ற மெட்டு

ஆதிசேடன் : நட்பினிலே சிறந்த சமுத்திர ராஜர்களே
நாட்டு வளப்பம் சொல்வீர்
ஏழ்கடலும் சூழும் லோகம் எங்கும் வாழும்
எம் குலத்தோர்கள் நலமா

கார்க்கோடன் : மாதவரைத் தாங்கி பாம்பணையாய் விளங்கும்
ஆதிசேஷரே கேளீர்
நம் குலக்குடிகள் எவரும் எங்கும் நல்ல
சௌக்யமாய் உள்ளாரய்யா.

தட்சகன் : ஸர்ப்ப சக்கரவர்த்தி ஆதிசேஷ ஐயா
நாட்டு வளப்பம் கேளீர்
புவிக்கோளம் எங்கும் எம்மோர் சிறப்புடன் உள்ளாரய்யா
உமக்கு நல் வாழ்த்துச் சொல்வோம்.

ஆதிசேஷன்
வசனம் : மிக்க மகிழ்ச்சி... அதோ சுலோசனையின் தோழியர் வாயிலில் காத்திருக்கிறார்கள். என்ன விபரம் என்றறி வோம்.

(கார்க்கோடன் வாயிலுக்குச் செல்கிறான்.)

கார்க்கோடன் : மகராஜ்! துன்பம் ஒன்று நேர்ந்து விட்டது. அதை எப்படித் தங்களுக்குச் சொல்வதென்று தெரியாமல், பாவம் அந்த மங்கையர்கள் நடுங்கிக் கொண்டிருக் கிறார்கள்.

ஆதிசேஷன் : என்ன, துன்பமா? எனக்கா? உடனே கூறுங்கள்.

தட்சகன் : நந்தவனத்தில் மலர்கொய்து விளையாடிக் கொண்டிருந்த இளவரசியார் சுலோசனையைக் காணவில்லையாம்.

ஆதிசேஷன் : ஆ! என்ன சொல்கிறீர்கள்

தட்சகன் : ஆம் மகராஜ். அழகுள்ள எமது இளவரசியாரை யாராவது கவர்ந்து சென்றிருக்கலாம்.

ஆதிசேஷன்
பாடல் : "அப்பா புலந்திரனே" என்ற மெட்டு
ஐயோ என் கண்மணியே எங்கு நீ சென்றாயம்மா
இப்பாரில் பாவியானேனே. இப்பாரில் பாவியானேனே

ஆதிசேஷன்
வசனம் : ஐயோ, என் மகளைப் பிரிந்து ஒரு கணமும் நான் இருந்ததில்லையே. சாரணர்களே! உடனே புறப்படுங்கள். என் மகளைத் தேடுங்கள். கார்க்கோடரே, தட்சகரே என் மகளைத் தேடுவதற்கு உதவுங்கள்

கார்க்கோடன் +
தட்சகன் : அப்படியே செய்கிறோம்
(போகிறார்கள்)

## காட்சி - 3
## இலங்கை அந்தப்புரம்

(சுலோசனை தேவி பூஜை செய்கிறாள்)

பாடல் :
சுலோசனை : பல்லவி
நீயே கதி ஈஸ்வரி சிவ
காமி எனை ஆதரி அம்ப (நீயே)

அனு பல்லவி
மாயா உலகிலே ஓயாத துயராலே
மாளாமலே ஒரு வழிகாட்டவே எனக்கு (நீயே)

(அசரீரியாக அம்பிகையின் குரல் ஒலித்தல்)

அம்பிகை : பரம பக்தையே, சுலோசனா! உனது உருக்கமான பிரார்த்தனையை மெச்சி, நீ யாரைக் குறித்துத் தியானித்தாயோ அந்த உமாதேவி வந்திருக்கிறேன். வேண்டிய வரம் கேள், தருகிறேன்.

சுலோசனை : தாயே! நான் நித்திய சுமங்கலியாக உலகத்தில் வாழும் பொருட்டாக, எனது நாயகர் சாகாதிருக்கும்படி வரங் கொடுக்க வேண்டுமம்மா.

அம்பிகை : மகளே! பிறந்தவர் எவரும் இறப்பது நியதி. மிதமிஞ்சிய ஆசை கொள்ளாமல் வேறு வரம் கேள், தருகிறேன்.

சுலோசனை : தேவி! எனது கணவர் யாவரையும் வென்று, முடிவில் என் பிதாவோடு போர் புரிவாராகில், அவர் கையினால் மாத்திரம் இறக்கும்படியான ஒருவரத்தைத் தரவேண்டும் அம்மா.

அம்பிகை : அப்படியே தந்தேன். நீ கவலைப்படாதே. மேலும், உனக்கு இன்னுமொரு வரமும் தருகிறேன். போர்க்களத்தில் உனது கணவனின் உடலுறுப்புகள் ஒவ்வொன்றாக வெட்டுண்டாலும் உன் கணவன் தலை உன் கேள்வி களுக்கு விடை அளிக்கும்படியாக வரம் தருகிறேன். இதோ எனது பூரண ஆசீர்வாதம்.

(அம்பிகையின் குரல் நின்றுபோக, இந்திரஜித்தன் வருகிறான்.)

இந்திரஜித்து : சுலோசனா! தேவிபூஜை முடிந்து விட்டதா?

சுலோசனை : ஆம், நாதா. இன்று கௌரி விரத இறுதிநாள். இன்று முதல் ஒன்பது நாட்களுக்கு உங்களை நாடி வரும் யாசகர் களுக்கு இச்சா தானம் வழங்க வேண்டும். யார் எதைக் கேட்டாலும், இல்லையென்னாது கொடுக்க வேண்டும்.

இந்திரஜித்து : அப்படியே செய்கிறேன் கண்ணே. (கைகளைத் தட்டி) யாரங்கே! விரைவாக மந்திரியையும் தளபதியையும் அழைத்து வாருங்கள்.

இந்திரஜித்து : சுலோசனா! நிகும்பலை யாகம் என்று ஒன்றுண்டு. அதனைச் செய்து முடித்துவிட்டால் என்னை ஒருவராலும் வெல்ல முடியாது. பிரமாதமான யுத்தம் நேரும்போது, அந்த யாகத்தைச் செய்வதற்கு எனக்கு ஞாபகப்படுத்த வேண்டும்.

சுலோசனை : பிராணேசா! தங்கள் சித்தப்படியே செய்கிறேன்.

இந்திரஜித்து : கல்யாண் காதலி

(போகிறார்கள்)

## காட்சி - 4
### நாகலோகம்

(நாரதர் பாடிக்கொண்டு வருகிறார்)

பாடல் : நாரதர் :

பல்லவி

நாராயணன் நாமம் பாடாத நாளெல்லாம்
வாழாத நாளாகுமே

(நாராயணன்)

அனுபல்லவி

தாமோதரா முகுந்தா மாதவா மதுசூதனா
கோபாலனே தேவா கோவிந்தா ஸ்ரீ ரங்கா

(நாராயணன்)

நாரதர் வசனம்: நானோர் திரிலோக சஞ்சாரி. எந்தையாம் பிரம்மனின் சாபத்தினால் ஒரு நாளைக்கு ஒரு கோளேனும் சொல்லா விடின் என் தலை சுக்குநூறாக வெடித்துவிடும். இதனால் ஒரு நாளைக்கு மேல் ஓரிடத்திலேயே தங்குவதற்கு எனக்கு பாக்கியம் இல்லை. ஆம், இன்று எனது கலகத்துக்கு ஏற்ற இடம் நாகலோகம் தான். ஆதிசேடனின் தர்பாருக்குச் சென்று என் கலகத்தை ஆரம்பிப்போம். நாராயணா...நாராயணா.

பாடல் : பல்லவி

நாராயணா நரபூஷணா ஹரி
நாராயணா

(நாராயணா)

அனு பல்லவி

சூராதி சூரா சங்காரா ஹரி தேவா
மாறாக் கோபியர் லீலைக்காரா மகிழ்வுதரும்
(நாராயணா)

சரணம்

நாளும் நினது தொண்டு நாடிச்செய் வேழம் அன்று
ஆதிமூலம் எனவே ஓடிச் சென்று அருள் தந்தாய்
கோலாகலா வேணு கோபாலனே தேவா
ஞாலம் புரக்கும் உந்தன் கோலம் கொண்டருள் தாராய்
(நாராயணா)

(பாடிக்கொண்டே வர, நாகலோகத்தில் ஆதிசேடன் சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்றான்)

ஆதிசேடன் வசனம் : சுவாமி! வரவேண்டும், வரவேண்டும்.

நாரதர் : விஜயீபவா! ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்? ஆழ்ந்த யோசனையில் கவலை கொண்டவனாகக் காணப்படுகிறாயே?

ஆதிசேடன் : அதை எப்படிச் சொல்வேன், சுவாமீ

பாடல் : "சொல்வதை நீ கேளடா" என்ற மெட்டு.

நாரதர் : எதுக்கு வாட்டம் கொண்டாய்
ஆதிசேஷனே
(ஏதுக்கு)

ஆதிசேஷன் : என்னென்று எடுத்துரைப்பேன்
என் வேதனையை
(என்னென்று)

நாரதர் : வேதனை ஏன் கொண்டாய் விபரமாய் உரைப்பாய்
ஏழ்கடலுக்கும் அதிபனே தீரனே
ஓதுவாய் சோகம் விடுத்தே.

ஆதிசேஷன் : பெண்ணால் அவமானம் விளைந்தது பாரில் இங்கே
துஷ்டனெவனோ மகளை முனியே
தூக்கிப்போனான் வருந்துகிறேன்.

நாரதர் வசனம் : உன் மகளைத் தூக்கிப் போனவன், இன்னானென்று உனக்குத் தெரியாது போலிருக்கிறது.

ஆதிசேடன் : தெரிந்திருந்தால் இந்நேரம் அவனை என்ன செய் திருப்பேன் தெரியுமா?

நாரதர் : என்ன செய்திருப்பாயாம்?

ஆதிசேடன் : அதென்ன, அப்படிக்கேட்கிறீர்கள் சுவாமீ? எனது விஷாக்கினியால் பொசுக்கியிருப்பேன்.

நாரதர் : ஸர்ப்பாதிபா, பதறாதே! பெண்ணாய்ப் பிறந்தால் ஒருவனுடன் போக வேண்டியவள் தானே. இதில் அவமானம் ஏதுமில்லை. கூட்டிப்போனவன் யாரென்று அறிந்து தக்க மரியாதைகளுடன் அவனை அழைத்துவா.

ஆதிசேடன் : தாங்கள் சொல்வதைப் பார்த்தால் மேலும் என்னை அவமானத்துக்கு உள்ளாக்க நினைத்தது போலிருக்கிறது. என் மகளைக் கவர்ந்து சென்றவனையும் யாரென்று தாங்கள் அறிவீர்கள் போலிருக்கிறது.

நாரதர் : நாகராஜா! எனக்கென்ன தெரியும்? உலக நடப்பைச் சொன்னேன். அதற்குள் உனக்குக் கோபம் வந்துவிட்டது. சுலோசனையை உன் மகள் என்று அறிந்தும் கூட்டிக் கொண்டு போயிருக்கிறானென்றால் அவன் உன்னைவிட வீரனாகத்தான் இருக்கவேண்டும்.

ஆதிசேடன் : என்ன? வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிறீரா?

பாடல் : "எட்டி நில்லும்" என்ற மெட்டு.

ஆதிசேடன் : பல்லவி

எட்டி நில்லும் நாரதரே என்
வீரத்தை இழிவாய்ச் சொல்லி ஏளனமும் செய்து நின்றீர்

அனுபல்லவி

என் மகளைப் பிரிந்து நான் சோகமுற்ற வேளையிலே
என்னெதிரி வீரம் சொல்லி என்னை இகழ்வாகச் சொன்னீர்
(எட்டி)

நாரதர் வசனம் : ஆதிசேஷா அறியாமற் பேசிவிட்டாய். உன் நன்மைக் காகத் தான் சொல்ல வந்தேன். நீயோ வெகுண்டெழுந்து விட்டாய்.

பாடல் : "ஏமா நீ மறந்தாய்" என்ற மெட்டு.

நாரதர் : சேஷா நீ மறந்தாய் - ஆதி

ஆதிசேஷன் : என்ன நான் மறந்தேன்

நாரதர் : ஏனோ தான் மறந்தாய்

ஆதிசேஷன் : ஏதோ நான் மறந்தேன்

நாரதர் : கொள்ளாதே கோபம் இனி

ஆதிசேஷன் : அவமானம் தீர்ந்திடுமோ

நாரதர் : கோபத்தினால் அழிந்தவர்கள் பாரிலுண்டு பாராய்.
பொறுமையோடு கருமம் ஆற்றல் கடமை உனது தேராய்.

ஆதிசேஷன் : இந்த வேளை அறிவுரையால் என்ன பயன் கண்டீர்
என்நிலையில் நீர்இருந்தால் உணர்ந்து கொள்வீர் பாரீர்.

நாரதர் வசனம் : ஏதோ நான் கேள்விப்பட்டதைத் தெரிவிக்கலாமென்று வந்தேன். உனக்குப் பொறுமை இல்லை. நான் வருகிறேன்.

ஆதிசேஷன் : சுவாமி! கோபித்துக் கொள்ளக்கூடாது. இந்த ஆசனத்தில் அமர்ந்து தாங்கள் கேள்விப்பட்டதைச் சொல்லுங்கள்.

நாரதர் : அமர்வதெல்லாம் இருக்கட்டும். நான் லங்காபுரி போயிருந்தேன் அல்லவா?

ஆதிசேஷன் : சுவாமி! தாங்கள் லங்காபுரிபோனாலென்ன, மங்காபுரி போனாலென்ன. என் புதல்வியைப் பற்றிக் கேள்விப் பட்டதைச் சொல்லுங்கள்.

நாரதர் : அதைத்தானே சொல்லவந்தேன். நீ என்னைப்பேச விட்டால் தானே இருவர் பேசிக்கொண்டு வந்தார்கள். இந்திரஜித்து சுலோசனையைக் கொண்டு வந்திருக் கிறானாம்.

ஆதிசேஷன் : ஆஹா! அப்படியா?

பாடல்

ஆதிசேஷன் : பல்லவி

விடுவேனோ அந்தப் பயலை மட்டிப்பயலை
துஷ்டப்பயலை நான்
விடுவேனோ அந்தப்பயலை
படுமோசம் செய்த அவன் ஆவியைப் பறிப்பேனிப்போ
(விடுவேனோ)

நாரதர் : அசகாய சூரன் அவன் தான் - இந்திரஜித்தன் - மந்திரம் மிக்க
அசகாய சூரன் அவன் தான்.
மிகுமாயம் செய்யும் அவன் உயிர்கொள்ள
வழிசொல்வேன்
(அசகாய)

ஆதிசேஷன் : ஆ! அந்த இந்திரஜித்தனை என்ன செய்கிறேன் பாருங்கள்.

நாரதர் வசனம் : இந்திரஜித்தனை யாரென்று நினைத்தாய்? அவன் மந்திரமாயம் தெரிந்தவன். அவனைத் தந்திரத்தால் தான் வெல்லவேண்டும். ஒரு உபாயம் சொல்கிறேன். அவன் இப்போது சுலோசனையின் மணமங்கள நிமித்தம் இச்சா தானம் வழங்கிவருகிறான். நீ ஒரு வேதியனாக மாறிச் சென்று, அவன் ஜீவனைத் தானமாகக் கேள். நான் போய் வருகிறேன்.

ஆதிசேஷன் : அப்படியே செய்கிறேன் சுவாமி

நாரதர் பாடல் : வேய்ங்குழல் மன்னா நாராயணா
வெங்கடேஸ்வரனே நாராயணா
பாற்கடல் பள்ளி கொள்ளும் நாராயணா
பரந்தாமா கிருஷ்ணா நாராயணா

(பாடிக்கொண்டே நாரதர் போகிறார்)
(ஒரு சால்வையால் தன்னைப் போர்த்துக் கொண்டு அந்தண வடிவில் ஆதிசேஷன் உரு மாறிச் செல்கிறான்)

## காட்சி - 5
### இலங்கை அரண்மனை

(இந்திரஜித்து முன்னால், அந்தணர் உருவில் ஆதிசேடன் வருகிறான்)

ஆதிசேடன்
பாடல் : ஆயிரம் கரங்கள் நீட்டி ஆதரவு தருவாய் போற்றி
மாதவம் செய்வோவர் வாழ்த்த ஈகையில் சிறந்தாய் போற்றி
மாநிலம் வாழ என்றும் மக்களைக் காப்பாய் போற்றி
தூயவா இச்சா தானம் செய்பவா போற்றி போற்றி

ஆதிசேடன்
வசனம் : மன்னா! தமது ஜீவனை எனக்குத் தானமாகக் கொடுக்க வேண்டும்.

இந்திரஜித்து : தருவதற்குத் தடையில்லை. ஆனால், யுத்த களத்தில் வந்து பெற்றுச் செல்லும்.

ஆதிசேடன் : ஆகட்டும், மன்னா.
(ஆதிசேடன் புன்னகையோடு போகிறான்)

## காட்சி - 6
### இராவணன் அரண்மனை

பாடல் : “பரா பரா பரமேஸ்வரா”என்ற மெட்டு

இராவணன் : பல்லவி
நடராஜனே கைலை வாசனே
உனைப் போற்றினேன் வரந்தந்தருள் செய் (நடராஜனே)

அனுபல்லவி

சாமகானம் பாடி துதி செய்குவேன்
நேமி நீ என்றேத்தி தினம் வாழ்த்துவேன் (நடராஜனே)

இராவணன்
வசனம் : கைலை வாழ் ஈசா! என் வீரம் தெரியாமல் மானிடப் பயல்கள் என்னோடு போர் தொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொட்டத்தை என் தம்பி கும்பகர்ணன் இப்போ அடக்கி வருவான்.
(ஆரவாரம், சோக ஒலி கேட்கிறது)
இந்திரஜித்து வருதல்.

இராவணன் : மகனே! வெளியே ஆரவாரம் கேட்கிறது? சோக ஒலியும் இணைந்து வருகிறதே.

இந்திரஜித்து : எந்தையே! எம் சிறிய தந்தையார் கும்பகர்ணன் போர்க் களத்தில் கொல்லப்பட்டு விட்டாராம்

இராவணன் : ஐயோ, கும்பகர்ணா! நீயும் மடிந்திட்டாயோ.
நான் இனி என்ன செய்வேன். நானே போர்க்களம் செல்வேன்.

இந்திரஜித்து : தந்தையே வருந்த வேண்டாம். நான் நிகும்பலை வேள்வி செய்து முடித்து உம் துயர் களைவேன். சீதையைப் போன்று ஒரு மாய உருவஞ் செய்து, அனுமன் காணும் படியாக வாளினால் வெட்டி, போக்குக்காட்டி வேள்வியை இடையூறில்லாமல் செய்து முடிப்பேன். அப்புறம் வெற்றி நமதே.

பாடல் : "மன்னவனைக் காணப்போகிறேன்" என்ற மெட்டு

இந்திரஜித்து : நிகும்பலை யாகம் முடிப்பேன் - தந்திரம் செய்தே//
நிகும்பலை யாகம் முடிப்பேன்.
ஜெகம் புகழும் வீரன் நித்யன் என்ற பேர் எடுப்பேன்.

இராவணன் : யாகம் செய்ய இடைஞ்சல் செய்வார் - இராம வீரர்//
யாகசாலையை அழித்து யாகத்தையும் துவம்சம் செய்வார்
(யாகம்)

இந்திரஜித்து : மாய சீதையை அநுமன் கண்முன்னாலே வெட்டிடுவேன்
இராம படை துயரில் மூழ்க வேள்வியினை நிறைவு செய்வேன்
(நிகும்பலை)

இராவணன் : நன்று சொன்னாய் மகனே இன்றே நிறைவேற்றிடு
என் துயரை ஆற்றிவிடு குலத்துக்குப் பெருமைகொடு
நன்று சொன்னாய் என் மகனே மனங்குளிர (நன்று)
(இந்திரஜித்து போகிறான்)

## காட்சி - 7
## இலங்கையில் போர்களம்

பாடல் : "பவளக்கொடியின் மீதிலாசை" என்ற மெட்டு

இந்திரஜித்து : பல்லவி
மாயமொன்று செய்து இப்போ முடிப்பேனே யாகம்
முடிப்பேனே யாகம் ஜெயிப்பேன் இப்போதே
(மாயமொன்று)

அனு பல்லவி
வானரப் படைகள் இனி என்ன செய்யலாகும்
இராம லக்குவனும் கூட மடியும் வேளை சூழ்ந்து விடும்
என் தந்தை மகிழ இப்போ முடிப்பேனே யாகம்
(மாயமொன்று)

இந்திரஜித்து
வசனம்: இப்பொழுதே ஒரு மாயாசீதையை உருவாக்கி, வானர வீரர் காண அவளை வெட்டுவோம். பரத சத்துரக்கினர் களையும் கொல்லப்போகிறேன் என்று போக்குக் காட்டி, யாகத்தைத் தொடங்கி நிறைவேற்றுவோம்.

(வாளால் சீதையை வெட்டப்போகிறான்)

பாடல் : "அடைக்கலமே" என்ற மெட்டு

அநுமன் : பல்லவி
பாவம் ஐயா கொல்ல வேண்டாம்
பூவைக்குச் சேதம் புரிய வேண்டாம் ஐயா (பாவம்)

அனுபல்லவி

சேவை செய்வேன் உமக்கு சீதையை விடுவீர்
தேவை என்றால் எனது உயிரையும் எடுப்பீர் (பாவம்)

அநுமன்
வசனம் : ஐயோ! சீதாப் பிராட்டியாரை விட்டுவிடுங்கள்
தேவையானால் என் உயிரை எடுங்கள்.

இந்திரஜித்து : (சிரித்து) அப்படியா? இதோ பார்.

(சீதையை வெட்டுகிறான்)

அங்கதன் : ஆஞ்சநேயரே! நாம் இனி என்ன செய்வோம்?
எப்படி இதனை ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்குச் சொல்வோம்.
எப்படியும் இந்திரஜித்தனைக் கொல்ல வேண்டும்.

அநுமன்
பாடல் : கொன்றாலும் வென்றாலும் இனி ஏதடா
அன்னை சீதா உயிரை மீட்கலாமோ
(கொன்றாலும்)

அங்கதன் : இனி என்ன செய்குவதோ நாம் அறியோம்
அண்ணல் ராம நாயகர்க்கு என்ன சொல்வோம்
(இனி என்ன)

(விபீஷணன் வருகிறான்)

விபீஷணன்
பாடல் : நீர் ஏன் புலம்புகிறீர் விபரம் சொல்வீர்
வீரர் கண்ணீர் சிந்தல் அழகல்லவே (நீர் ஏன்)

விபீஷணன்
வசனம்: மாருதியாரே, அங்கதனோடு சேர்ந்து ஏன் அழுது புலம்புகிறீர்?

அநுமன் : எங்கள் சீதா பிராட்டியாரை இந்திரஜித்தன் வெட்டி விட்டான் ஐயா. எம் கண்களால் கண்டோம்.

விபீஷணன் : ஆஞ்சநேயரே! இந்திரஜித்தன் மாயம் செய்வதில் வல்லவன்.
உண்மை என்னவென்று நான் அறிந்து வருகிறேன்.
அதுவரை கவலை கொள்ளாதீர்கள்.

(போகிறார்கள்)

## காட்சி - 8
### இராமர் தங்கிய பாசறை

(அநுமன் கூறிய சேதியால் இராமன் வருந்திப் பாடுதல்)

பாடல் : "ஏது செய்வேன் விதி சூழ்ந்திடும்..." என்ற மெட்டு

இராமன் பாடல்: ஏனெடுத்தேன் அரசாள் மகனாகிய தேகம்
அதனால் அடைந்தேன் பெரும் சோகம்
மாநிலத்தே முன்னைப் பிறவியில் சூழ் பழியாலோ
வினைப் பயன் பெறும் காலமிதாச்சோ

தொகையறா
என்னை எண்ணிப் பத்து மாதம் பாழுஞ்சிறை இருந்தாளே
இந்திரஜித்தன் வாளினாலே இறந்தாளே இத்தரையில்
அண்டை அயலார் நகைக்க ஆனதே மானம் போனதே
சண்டையில்வென்றாலென்ன இனி சாவுதான்நேர்ந்தாலென்ன.

கண்ணியாள் என் சீதையும் போன பின்னால் - இனி
ஆவதென்னன புவி மீதே...
(ஏனெடுத்தேன்)

இராமர் வசனம்: ஐயோ, என் சீதா! இந்திரஜித்தன் வாளால் வெட்டுண்டு இறந்தாயோ. என்னவெல்லாம் எண்ணிக் கதறினாயோ. உன்னை மாற்றானிடமிருந்து மீட்க முடியாத பாவி யானேனே. இனி வாழ்ந்தென்ன... இனி யுத்தம் ஏன்... யாருக்காக நான் போரிட வேண்டும்?

(விபீஷணன் வருகிறான்)
(கூடவே அநுமனும் அங்கதனும் வருகிறார்கள்)

விபீஷணன் : ஐயனே! கவலை வேண்டாம். எங்கள் அன்னையார் சீதாப்பிராட்டியார் அசோகவனத்தில் உயிரோடிருக்கிறார். தங்கள் திருநாமத்தை உச்சரித்துக்கொண்டு அழுத கண்ணீரும் சிந்தையுமாக இருப்பதைக் கண்டு வந்தேன்.

இராமன் : விபீஷணா, உண்மையாகவா கூறுகிறாய்?

விபீஷணன் : ஆம், சுவாமி! இந்திரஜித்தன் மாயம் செய்வதில் வல்லவன். அவன் வெட்டி எறிந்தது மந்திர பலத்தால் உரு வாக்கிய மாய சீதை தான் ஐயனே.

இராமன் : நல்ல வார்த்தைகள் கூறினாய் விபீஷணா. உனக்கு என்ன கைம்மாறு செய்வேன்...

விபீஷணன் : அண்ணலே! இந்திரஜித்தன் நிகும்பலை யாகம் செய் கிறான். இந்த யாகம் நிறைவேறி விட்டால் யாராலும் அவனை வெல்ல முடியாது. இப்பொழுதே அவன் யாகத்தை அழிக்க வேண்டும்.

அங்கதன் : இராமச்சந்திரபிரபூ! இப்பொழுதே உத்தரவு கொடுங்கள். நானே சென்று அந்த யாகத்தை அழித்து வருகிறேன்.

அநுமன் : ஐயனே! இளவல் அங்கதனை அனுப்ப வேண்டாம். நான் இப்பொழுதே சென்று நிகும்பலை யாகத்தைச் சின்னா பின்னமாக்குகிறேன்.

விபீஷணன் : மாருதியாரே! இந்திரஜித்தன் மாயாஜாலக்காரன், அதி தீரன். அவனை வெல்வதென்றால்...

அங்கதன் : நாம் எம் வானரப்படைகளோடு அங்கு செல்வோம்.

இராமன் : ஆஞ்சநேயரே, சற்றுப் பொறுத்துக் கொள்ளும். என் தம்பியை அழைத்து வாருங்கள்.
(இலக்குவன் வருதல்)

பாடல் : "அண்ணா நின் வந்தனம்" என்ற மெட்டு

இலக்குவன் :
அண்ணா நின் வந்தனம் அருமைச் சகோதரா
கண்ணான கண்ணின் மணியே பண்ணாரமுதே
(அண்ணா)

இராமன் : விரைவாய் நீ செல்வாய் தம்பி நிகும்பலை யாகம் தீய்ப்பாய்
மேகநாதனை வதம் செய்வாய் தலை கொணர்வாய்
(விரைவாய்)

இலக்குவன் : மந்திர மாயமெல்லாம் செய்யினும் விடவும் மாட்டேன்
நிகும்பலை யாகம் சிதைத்தே அவன் சிரசும் கொய்வேன்
(அண்ணா)

இராமன் : அம்புக்கு அம்பு தொடு வேலுக்கு வேலும் விடு
குறிதவறாமல் தொடு போரில் நீ வெல்வாய்
(விரைவாய்)

இராமன்
வசனம்: லட்சுமணா! இந்திரஜித்தனால் ஏவப்படும் கணைகளுக்கு பகைப்பாணங்களைத் தொடு அவன் வேள்வியைப் பாழாக்கி அவன் தலையையும் வெட்டிக்கொண்டு வா. இந்த வானர ஜைனியங்களோடு விரைந்து நீ செல்.

இலக்குவன் : அப்படியே ஆகட்டும், அண்ணா

பாடல் : "எத்தனை நேரமாக" என்ற மெட்டு
இராகம் : தந்யாஸி

இலக்குவன்: பல்லவி
உத்தரவுப்படியே இன்று சீக்கிரம் சென்று வாறேன்.
அவன் தலை கொண்டு வாறேன்.

அனு பல்லவி
ககனம் பறந்தாலும் கடலிற் புகுந்தாலும்
கண்டு கண்டு முன் சென்று சண்டை செய்வேன் நான் மேலும்
(உத்தரவுப்)

இலக்குவன்
வசனம் : சென்று வருகிறேன் அண்ணா. இந்திரஜித்தனை வென்று வருவேன். மாருதி, அங்கதா! நாம் செல்வோமா?

## காட்சி - 9

### யாகசாலை

(அநுமார், அங்கதன், விபீஷணன் முதலிய வீரர்கள் இலக்குவனோடு வருகிறார்கள்)

விபீஷணன் : இது வேள்விச் சாலை. நிகும்பலையாகம் நிறைவேறுமுன் நமது வேலையை முடிக்க வேண்டும்

அங்கதன் : இதற்குள்ளே தான் யாகச்சடங்குகள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறானோ.

விபீஷணன் : ஆம்

அநுமன் : நல்லது. நீங்கள் எல்லோரும் யாகசாலையைச்சுற்றி நான்கு புறமும் ஜாக்கிரதையாக நில்லுங்கள். நான் அவனைக் கூவி அழைக்கிறேன்...

அடே இந்திரஜித்து வாடா வெளியே.

அங்கதன்: விபீஷணரே, என்ன, இவ்வளவு தூரம் கூவியழைத்தும் இந்திரஜித்தன் வெளியே வராமல் இருக்கிறான்.

விபீஷணன் : அவன் மாயக்காரன். நாங்கள் விரைவாக யாகசாலையை அழிப்போம்.

அங்கதன் : அதுதான் சரி...

(எல்லோரும் சத்தம் போட்டபடி யாகசாலையை அழிக்கிறார்கள்)

(இந்திரஜித்து வெளியே வருகிறான்)

அநுமன் : துஷ்டா! இனியும் உன்னை நிகும்பலை யாகம் செய்ய விட மாட்டோம். நில்லடா.

இந்திரஜித்து : நிகும்பலை யாகம் என்ற பெயரைக் கூட யார் சொல்லி இருப்பார்கள்.

(விபீஷணனைக் காண்கிறான்)
ஓஹோ! எம் குலத்துரோகி நமது சிற்றப்பன் விபீஷணன் வேலை இது. (விபீஷணனிடம்) அடே, சிற்றப்பா. நீ எம் குலத்தைக் கெடுக்க வந்த கோடரிப் பாம்படா.

விபீஷணன் : அடே, முட்டாள். உன் தகப்பன் அறிவில்லாத முட்டாள். ஜானகி அம்மனின் கற்பு எனும் நெருப்பு உங்களை எல்லாம் சுட்டுப்பொசுக்கப் போகிறது.
(இலக்குவன் எதிர்ப்படல்)

பாடல் : "போருக்கு நீ வந்து பாரடா" என்ற மெட்டு

இலக்குவன் :
போருக்கு நீ வந்து பாரடா எம்மை
ஏய்த்திடும் சூரனோ கூறடா.
மாயஞாலம் செய்பவன் வென்றதுண்டோடா
வாய் ஜாலம் பண்ணாதே வந்து நீ பாராடா
(போருக்கு)

இந்திரஜித்து :
என்னடா லக்குவா இன்னமுமே உந்தன்
எண்ணத்திலுள்ளது என்னடா
மூவுலகும் வென்ற சூரர்கள் நாமடா
முன் வந்து உன்னுயிர் பற்றுவேன் பாரடா
(என்னடா)

இலக்குவன் :
இத்தனை நாள் போல இன்று நீ எண்ணாதே
என்னை அகன்றோட யோசனை செய்யாதே
அஸ்திரங்கொண்டுன்னைத் துண்டு துண்டாக்குவேன்
போக்குவேன் ஆவியை இக்கணம் பாரடா.
(போருக்கு)

இலக்குவன்
வசனம் : இதோ பாரடா உன் கணை எல்லாம் பொடிப்பொடி ஆக்குகிறேன்.

(இருவரும் கணை ஏவுகிறார்கள்)

இலக்குவன் : இதோ பார் உன் கரத்தைத் துண்டித்து உன் மனைவியின் முன்னால் விழச் செய்கிறேன். உன் உடலைத் துண்டு துண்டாக்கி உன் தலையை ஸ்ரீஇராமபிரானின் காலடி களில் சேர்க்கிறேன்.

(இந்திரஜித்து துண்டிக்கப்படுகிறான்)

## காட்சி 10
### (சுலோசனை முன்னால் இந்திரஜித்தன் கரம் வந்து விழுகிறது)

சுலோசனை: ஐயோ! இது என் நாதனின் வலது கரமல்லவா
என்ன நடந்தது? என் நாதனை எங்குதேடுவேன்?

(தேடி வரும்போது, உடலத்தைக் காண்கிறாள்)
ஐயோ! துண்டு துண்டாக என் நாயகன் உடல் சிதறிக்
கிடக்கிறதே. அவர் தலையை எங்கே தேடுவேன்?

(இராமரின் பாசறைக்கு வருகிறாள்)

பாடல் : "ஆலமரம் என்பது இது தானோ" என்ற மெட்டு

சுலோ : நாயகன் தலைதேடி நொந்தேனே எங்கும்
போகும் வழி ஏதும் தெரியேனே
சிரசை எடுத்தெங்கோ வீசினாரோ எந்தன்
நாயகன் ஆருயிர் பறித்தாரோ

இராமர் : அங்கதா! இவள் பதிவிரதை. இவளின் நாயகனின் தலையைக் கொண்டு வந்து கொடுங்கள்.

அங்கதன் : பிரபோ! அந்தத் தலையை நான் தான் தூரவீசிவிட்டேன். பல்வேறு உடல்களுக்கு மத்தியில் இவள் எவ்வாறு தேடப் போகிறாள்?

சுலோசனை : எந்த இடத்தில் நின்று எறிந்தீர்கள் எனக்கூறுங்கள், ஐயா. அந்த இடத்தில் நின்று நான் அழைத்தால் என் நாயகர் தலை முன்னே வந்து பதில் கூறும்.

இராமர் : அப்படியா?

அங்கதன் : இதோ இந்த இடம் தான்.
பாடல் : "நாதனுயிர் தாருமையா" என்ற மெட்டு

சுலோசனை : எந்தன் முன்னே வாருமையா
உத்தரம் தாருமையா தாருமையா நான்
பேதை இங்கு வாடலானேன் (எந்தன்)

சுலோசனை
வசனம் : நாதா! மானிடரையும் வானரங்களையும் கொல்வதற்கு நிகும்பலை யாகத்தைச் செய்ய வேண்டுமா? என் தந்தை ஆதிசேடனிடம் கூறியிருந்தால் தன் மூச்சுக்காற்றி னாலேயே எல்லோரையும் அழித்திருப்பாரே.
(தலை சிரிக்கிறது)

லஷ்மணன் : ஆ! தலை சிரிக்கிறதே. இன்னும் உயிர் போகவில்லையா?

இராமன் : தம்பி! பொறுத்துக்கொள். பதறாதே.

சுலோசனை : நாதா! நான் கேட்டகேள்விக்குப் பதில் சொல்லாமல் ஏன் சிரிக்கிறீர்கள்.

இந்திரஜித்துவின்
தலை : பெண்ணே! விபரபம் புரியாமல் பேசுகிறாய். அதோ எனது எதிரே வில்லம்பும் கையுமாக நிற்கின்ற மகானுபாவரே உனது பிதா. அவரே என்னைக் கொன்றவர்.

(இலக்குவன் சோகமுற்றுப் பூமியில் விழுகிறான்)

இராமர் : தம்பி, கவலைப்படாதே. இது விதியின் சோதனை. (சுலோசனையிடம்) பெண்ணே! உன் கணவனின் தலையை எடுத்துச் செல். என் செய்யலாம். எல்லாம் என்றோ விதிக்கப்பட்டவை. யார் என்ன செய்யலாம்.

(தலையை எடுத்துச் செல்கிறாள்)

(பின்னணியில் பாடல் ஒலிக்கிறது)

பாடல்
இராகம் : காபி

பதிவிரதையாய் வாழ்ந்து கணவன் பணி செய்தே
விதிவருவினைவழியே நாயகன் உயிர் பிரிய
கதி ஏதும் அறியாப் பெண்ணாய் பதியவன் உடலமோடு
சதிஎனும் உடன் கட்டைஏறி சிறப்புற்றாள் சுலோசனையே.

***

# அருச்சுனன் தபசு

- நாட்டுக் கூத்து -

**பாத்திரங்கள் :-**

அருச்சுனன்
மோகினி
கிருஷ்ணன்
பேரண்டன்
பேரண்டச்சி
வேடுவன்
வேடுவிச்சி
சிவபெருமான்
பார்வதி

## கடவுள் துதி

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
நேய மனம் பூண்டு நேரிழையாய் தந்திடுவாய்
தூய உள்ளம் கொண்டு தோத்தரித்துப் போற்றுகிறோம்
தாயனைய சக்தியே சேய்களௌமைக் காருமே.

அருச்சுனன் விருத்தம் :
தவமான முனி அகலச் செய்த பாவம்
தானகல மனம் அகலச் சகதியாக
அவமான இழி குலத்தாசை எல்லாம்
அகலவிகல அரியபெரு நோன்பு கொண்டு
சிவவேடம் தரித்து வில்லும் பிடித்து
முக்கண்ணனை நினைந்து விபூதியும் தரித்து
நலமான காசியாத்திரைக்குப் பார்த்தன்
நடந்திட்டான் தலங்கள் கண்டுமகிழ்ந்து

அருச்சுனன் பாட்டு :
தவம் செய்ய நடந்தானே அருச்சுன ராஜன் - தவம் செய்ய நடந்தானே
தனஞ்சயன் வனமீதில் - அம்மை அப்பனைநாடி தவம் செய்ய நடந்தானே
மெய்யெங்கும் திருநீறு பூசிவேதமுனி சொன்ன மந்திரமெல்லாம்
உய்தி தருமென்று உச்சரித்துச் சிவன் உறையும் மலைநாடி
தவம் செய்ய நடந்தானே அருச்சுன ராஜன் - தவம் செய்ய நடந்தானே
நீண்ட சடைதுலங்க கரம் தன்னில் - நெடிய சிலை விளங்க
பூண்ட விரதத்தைப் பேணி அனுட்டிக்க திண்ணிய நெஞ்சினனாய்
தவம் செய்ய நடந்தானே அருச்சுன ராஜன் - தவம் செய்ய நடந்தானே.

அருச்சுனன் துதி :
ஆதி நாயகனே போற்றி அரும் பெரும் சுடரே போற்றி
நீதியாய் நிலனெங்கும் நிறைந்திட்டாய் பரனே போற்றி
சோதியாய்க் கைலைவாழும் சுந்தரத் திருவே போற்றி
பாதிமதி அணிந்தவா பூதலம் காக்கும் பராபரா போற்றி போற்றி.

அருச்சுனன் வசனம் :
சகல ஜீவராசிகளையும் இரட்சிக்கும் தயாபரக் கடவுளே! அடியேன் கைலை நாடி வந்தேன். வேண்டும் வரங்களை அருளும் ஐயா.

மோகினி வரவு விருத்தம் :
சித்திரப் பதுமை போலே சிறந்ததோர் ரூபமாகி
கண்டவர் தனைமயக்கக் கார்மேகன் உருவம் மாறி
உத்தமன் விசயனைத்தெருட்டிச் சோதிக்கப் பெண்ணேபோல்
மோகினி வடிவமாக மாயவன் வருகின்றானே.

மோகினி தரு:
வந்தாளே மாயமோகினி சபையைநாடி வாறாளே மாயமோகினி
வந்தாள் அற்புதமாய் ஆடி மாயப்புன்னகையும் வீசி
வந்தாளே மாயமோகினி சபையை நாடி வந்தாளே மாயமோகினி
ஆடும் மயில்போல அன்னநடை மெல்லியளாள் நடந்து
தேடும் விழி உருட்டி விசயனைத் - தான் கவர்ந்தே இழுக்க
வந்தாளே மாயமோகினி சபையை நாடி வந்தாளே மாயமோகினி

மோகினி வசனம்:
அன்பரே! மோகமாகிச் சேர்ந்தனைய வந்தேன். ஆசை தீர என்னை அணைத்தாளும் காதலரே.

அருச்சுனன் விருத்தம்:
ஆரடி பெண்ணே நீயும் அரியதோர் வனத்திடை வந்து
ஏதடி காரணம் நீ என்னையேன் தடுக்கிறாயே
கூறடி நீயும் பேயோ பிணம் தின்னும் பிசாசுதானோ
ஏனடி வழியில் வந்தாய் விலகியே செல்லுவாயே.

மோகினி தரு:
தவசியே நீர் கேளும் தெய்வ கன்னிகை நான்
ஆசையாய் என்னுடன் கூடியே செல்லும் ஐயா

அருச்சுனன் தரு:
மோகினி போல வந்து பின்னம் பேசிடலாமோ பெண்ணே
ஆகாது மாபாவம் அடுக்குமோ உனக்கிது பெண்ணே

மோகினி கந்தார்த்தம்:
மன்னவனே உன்னை நாடி வனத்தினில் வந்த என்னை
உன்னியே வெறுத்து ஒதுக்கியே உரைக்கலாமோ

மோகினி தரு:
என்னுயிர் வதைப்பதேன் ஐயா மன்னவா
கன்னியெனைக் கலந்தணையுமே காதலால்
மன்மத பாணம் என்னில் - மிகுந்த
துன்பமே செய்யுது வாரும் ஐயா

அருச்சுனன் கந்தார்த்தம்:
சங்கரன் தன்னை வேண்டி தவம் புரிய தவசிநானும்
மங்கையே துறவி வேடம் தரித்துமே வந்தவேளை
பங்கமே செய்யவந்தாய் மருட்டியே வெருட்டுகின்றாய்
அங்கமே அறுத்து உன்னை நரகம் நான் அனுப்புவேனே

அருச்சுனன் தரு:
மங்கையே முன்நில்லாது ஓடடீ உனதுயிர்
மாயமாய்ச் சிதறும் பாராடி
ஒரு நொடி தனிலே சிரமது அறவே
வருகுது சரமது உயதுயிர் மடியவே.

அருச்சுனன் வசனம்:
கேளடி பெண்ணே. உன்னைப் பார்த்தால் ஒரு மாயப் பெண்போல் தெரிகிறது. என் கண் முன் நில்லாதே, ஓடிப்போ.

(கிருஷ்ணன் திடீர்ப்பிரவேசம்)

அருச்சுனன் தரு:
சரணம் சரணம் ஐயாவே  நந்தகோபா  சரணம் சரணம் ஐயாவே
தருணம் இதுவேளை விரைந்து நீ வந்ததேன் கருணையைக் காட்டவன்றோ.

கிருஷ்ணர் விருத்தம்:
பற்குணா சொல்லக்கேளாய் பாதையால் நீ வரும்போது
புதுமைகள் கண்டதுண்டோ புகலுவாய் நான் மகிழ
பயங்கரம் ஏதும் எண்ணிப் பார்த்தா நீ பயந்தாயோ
பரந்தாமன் எனை நினைத்து பாந்தமாய் அழைத்தாயோ.

அருச்சுனன் பாட்டு:
கண்ட புதுமைகள் கேளாய் நீ இந்தக் கடியவனம் தனில் நான் வரும் போது
பொல்லாத கன்னி அவள் போக வேண்டாம் என்று சொல்லி
கையைப் பிடித்திழுத்தாள் கலியாணம் செய்யும் என்றாள்
பொய்யான மொழிபேசி போகமும் வேண்டி வந்தாள்

கிருஷ்ணர் பாட்டு:
என்ன வார்த்தை சொன்னாய் என் மைத்துனா  அவளை
ஆரென்று பார்த்தாயோ பற்குணா
ஆமென்று சொன்னாயோ அவளுடன்
கூடி நீ மகிழ்ந்தாயோ கூறு நீ

அருச்சுனன் பாட்டு:
கபட நாடகச் சூத்திர தாரியே உந்தன்
கபட மெல்லாம் நான் அறிவேனே
வடிவான மோகினி போல் வந்து என்னை
நெடுங்காலம் செல்லாமல் தடுத்தாயோ

அருச்சுனன் வசனம்:
தாமோதரா! என்னைத் தவம் செய்ய அனுப்பிவிட்டு
மோகினிபோல வந்து என்னை மயக்கப் பார்த்தாயா?
உன் வஞ்சகம் நான் அறிவேன். உன் கழுத்திலுள்ள மாலையை
அகற்ற மறந்து விட்டாயே.

கிருஷ்ணர் தரு:
சொல்வதுகேள் மைத்துனா நானும் உன்னை
சோதிக்க எண்ணியே வந்தேன் - தையல் வடிவெடுத்து
நானும் வனந்தனில் தனியனாய் வந்தேனே
சங்கரரைப் பணிந்து அவர் தாளடி வணங்கி
பாசுபதம் பெற்றுவாராய் மங்கையரை மறந்து

கிருஷ்ணர் வசனம்:
அருமை மைத்துனா! உன்னைச் சோதிக்க எண்ணினோம்
நீர் உடனே சென்று சங்கரரைப் பணிந்து பாசுபதாஸ்திரம்
பெற்றுவாரும்.
(கிருஷ்ணன் செல்கிறார்)

பேரண்டன் - பேரண்டச்சி வரவு விருத்தம்:
அண்டமும் கிடுகிடென்ன அமரரும் மனமொடுங்க
எண்திசை நடுநடுங்க எல்லோரும் திடுக்கிட்டேங்க
துட்டரைச் சிரம் இரண்டாய்த் துண்டிக்கும் வீரதீரன்
பேரண்டன் பேரண்டச்சியோடு பெருஞ்சபை வருகிறானே.

தரு:
மண்டலம் புகழ் பெற்ற பேரண்ட ராட்சதன்
பலசாலியான பெருவித்தைக் காரன் - மண்ணில்
அண்டரும் ஒடுங்கிட எதிர்த்தவர் மடிந்திட
நெடுங்கானில் வாழும் பேரண்டன் வந்தான்

பேரண்டச்சி விருத்தம்:
சட்டிபோல் வளைந்த காதும் சாடிபோல் உருண்ட வயிறும்
சிறுத்தைபோல் சுருண்டமுகமும் சிங்கம் போல விரிந்த சடையும்
மட்டிலா வாயும் மூக்கும் பானைபோல் திரண்ட தனமும்
கட்டிலா மிருகம் போல பேரண்ட அரக்கி வந்தாளே

பேரண்டச்சி பாட்டு:
வந்தாள் அரக்கி எனும் மாது  வனந்தனில்
வாறாள் அரக்கி எனும் மாது
வந்தாள் அரக்கி மாது வனங்கள் நடுநடுங்க
வந்த மிருகமெல்லாம் நொந்துமே சிதறிஓட
அகண்ட முகமுடையாள் பரந்த வயிறுடையாள்
அரிய வனந்தனிலே அரிவையவள் ஓடிவாறாள்

பேரண்டச்சி தரு:
அண்ட முனிவர்களும் கண்டு பிரமை கொள்ளும்
தண்டைச் சிலம்பொலிக்க பேரண்டச்சி வந்தாளே

பேரண்டன் விருத்தம்:
அன்னமே பெண்ணே எந்தன் அழகுமயிலே கேளாய்
வண்ணமாய் நானுமிப்போ வனவேட்டை ஆட வேண்டும்
உன்னையும் அழைத்துச் செல்ல உத்தேசம் கொண்டேன் இப்போ
நன்னய வலைகள் நீயும் நங்கையே எடுத்து வாராய்

பேரண்டன் தரு:
கண்ணிய எண்ணிய வண்ணமுள்ள பெண்ணே
கருதரிய வலையதனை கையிலெடும் பெண்ணே

பேரண்டச்சி தரு:
வண்ணவலைக் கண்ணியொடு மான்வலைகளும் கொண்டு
பக்குவமாய் வாறேன் பாரும் இதோ நாதா

பேரண்டன் வசனம்:
அன்பே, வலைகளைக் கட்டி மிருக சாதிகளைப் பிடித்து வருகிறேன். ஆல மரத்தடியில் அமர்ந்திரு பெண்ணே.

அருச்சுனன் தவம்:
அரிஅயன் அமரர் போற்றும் அரவணி அரனே போற்றி
கரியுரு போர்த்தத ஞானக் கடவுளே போற்றி போற்றி

திரிபுரம் எரித்தாய் போற்றி திரிசடை இறைவா போற்றி
பரிதியின் சோசதியான பார்வதி பங்கா போற்றி

அருச்சுனன் வசனம்:
கைலை வாசா! கருணைக் கடலே! தங்கள் சிவபதியை நாடியுள்ளேன். இடையூறின்றி இனிதே காத்தருளும் சுவாமி.

பேரண்டச்சி தரு:
ஆசையுள்ளவரோ ஆரிவரோ நானறியேன்
நேசமாய் என்னை இவர் பாசம் வைத்தணைகுவாரோ
மன்னவரே உன் அழகைக் கண்டு நானும் மையல் கொண்டேன்
என்னவரே இங்கு வந்து இன்பந்தந்து ஏகலீலை புரிந்திடுவீர்

பேரண்டச்சி வசனம்:
ஆஹா! இவர் தான் மன்மதனோ மயக்கும் பிரம்மனோ. எவராயினும் அருகில் சென்று அணைவோம்.

பேரண்டச்சி கந்தார்த்தம்:
பூண்டனை தவவேடம் மன்னா நவரத்தின மகுடம்
சூட்டிய பூவை நானும் சொல்லுமோர் வார்த்தைகேளாய்
காட்டினில் வாழுகின்ற பேரண்டச்சி என்பேர்

பேரண்டச்சி தரு:
தழுவியணைய வந்தேனே என் சுவாமி துரையே
வழுவாதே வந்தணையும் என் இனிய காதலரே
பாழ்நெஞ்சை மன்மதன் பாடுபட வைக்கின்றான்
சூழ் மோகம் தீர எனை ஆசையாய் அணைவாயே

அருச்சுனன் கந்தார்த்தம்:
வட்டவேல் விழியினாலே வனிதையே வருத்த வந்தாய்
கிட்டவந்தணையுமென்றாய் கேவலமே பேசிநின்றாய்
பொட்டென உரைக்கவேண்டும் பொறுக்கவோ நேரமில்லை
திட்டமாய் வனத்திடைவந்து வழிமறித்த சேதி என்ன

சொல்லடி பெண்ணே உன் ஊருடன் பேரும் வாறும்
இங்கு வந்த காரணமும் நெஞ்சறிய எந்தனுக்கு

அருச்சுனன் பாட்டு:
ஆதிசிவன் பாதம் வேண்டி கைலையை நோக்கியே அருந்தவம் புரிய எண்ணி
போகும் வழியில் பொல்லாத வார்த்தைகள் வேண்டாமடி சிறுக்கி

பேரண்டச்சி பாட்டு:
உன் அழகு கண்டு நான் ஓடி வந்தேனே ஐயா
என் அழகைப் பாராய் உன்னுடன் கூட வாறேன்

அருச்சுனன் வசனம்:
கேளடி, அரக்கி பாதிமதி அணிந்த பரமனிடத்தில் தவம் செய்யப் போகிறேன். வழிவிட்டு விலகி நிற்பாய். இல்லையேல் உன்னைக் கொன்றுவிடுவேன் பாரடி.

அருச்சுனன் கந்தார்த்தம்:
காட்டினில் வழிமறித்த காதகி அரக்கி தானும்
கூறி வசனம் கேட்டு கொடும் சினம் கொண்டு இப்போ
கையிலே வில்லும் ஏந்தி கடுகியே அம்பும் பூட்டி
சொல்லவே தவசி நானும் கொக்கரித்துத் தான் எழுந்தேன்
கொல்லுவேன் பாரடி சொல்லுவேன் உன்னைநான்
கோதையே கொடும் அரக்கி அடிபாரடி
வில்லாளன் விசயன் பொல்லாதவன் நான்
நில்லாதே ஓடிப்போடி உன்உயிர் தான் சுமந்து

பேரண்டச்சி பாட்டு:
என்ன செய்வேன் ஏதுசெய்வேன்
இந்த மோசம் வந்த தேனோ பிராண நாதா

பேரண்டச்சி வசனம்:
ஐயோ, என் பிராண நாதரே! எங்கிருக்கிறீர்?
அடியாளை இந்தவேளை வந்து பாதுகாக்க வேண்டும், சுவாமி.

பேரண்டன் விருத்தம்:
அண்டமும் விண்டமும் அதிர்ந்து நடுங்கிட அரிபரிதத்தளிக்க
அரசரோடவுணரும் அசைந்து நடுங்கிட ஆர்ப்பரித்தெழுந்துமே தான்
கண்டவர் கலங்கிடக் காரிருள் போலவே கரிநிற் உடையோனாய்
கண்டதோர் மிருகமும் துண்டு துண்டாய் விழ கையில் கதை எடுத்தே
மண்டலம் அதிர்ந்திட மனைவி அழும் குரல் மன்னவன் தான் கேட்டு
துண்டு துண்டாகவே துணித்திடுவேன் என்று தோகையாள் தன்னருகில்
எண்டிசை கலங்கிட மமதையும் கொண்டுமே அன்னவன் தான் நடந்து
தண்டுமே கைதனில் எடுத்துமே பேரண்ட ராட்சதன் வருகிறானே.

பேரண்டன் பாட்டு:
வந்தான் பேரண்ட ராட்சதன் - மங்கையைத் தேடி
வாறான் பேரண்ட ராட்சதன்
வந்தான் ராட்சதன் தானும் மனைவி அழுத சத்தம்
காதினில் கேட்டதும் கடும் கோபம் கொண்டெழுந்து

பேரண்டன் விருத்தம்:
என்னுயிர்க்குயிராய் வாழும் என் ஆசை நாயகியே கேளாய்
மின்கொடி இடையினாளே சோர்ந்திருப்பதேனடி
அன்னமே நீ அணிந்த ஆடை ஆபரணமெல்லாம்
சின்ன பின்னமான சேதியை உரை செய்வாயே.

பேரண்டன் வசனம்:
அன்னமே! உன் ஆடை ஆபரணம் யாவும் அலங்கோலமாக இருக்கிறதே. என்ன நடந்தது கூறு.

பேரண்டச்சி பாட்டு:
தவசியைப் போல் ஒருவன் தாகவிடாய் தீருமென்றான்
தண்ணீர் குடித்தவுடன் தையலே நீ வா என்றான்
மங்கையே என்னை நீயும் மணமது செய்யுமென்றான்
பாவி அவன்மேல் விழுந்து தாவி அணையுமென்றான்

பேரண்டன் பாட்டு:
என்னுடைய பெயரைக் கேட்டால் எமனும் நடுங்குவானே
வம்புகள் செய்தவனை வதைக்கின்றேன் பாருமடி

பேரண்டன் வசனம்:
கேளும் பெண்ணே! அவனைக் கொல்லாமல் விட மாட்டேன். நீ நம் இருப்பிடம் செல் பெண்ணே.

பேரண்டன் விருத்தம்:
தவசியே நீ யாரடா அரிய இவ்வனத்தில் வந்து
அஅலசியும் பாராமல் என் அரிவையைப் பங்கம் செய்தாய்
சினந்துமே சிங்கம் போலே சீறினேன் என்றால் நீ
சின்னா பின்னமாகிப் போவாய் சிறியனே வாடா இங்கே

பேரண்டன் வசனம்:
அக்கிரம அகோர முனியே! ஆரண்யத்தில் எனது மனைவியை மருவிட வந்தாய் என்னிடம் உன் திறமையைக் காட்டு, பார்ப்போம்

அருச்சுனன் விருத்தம்:
கெட்டவனே பேரண்டா சொல்லக்கேளாய்
கருவமும் கொண்டாய் இப்போ
உன் மனைவி வார்த்தைகேட்டு வதையுற வந்தாயோடா
அரனை நான் தியானம் செய்து அவர் பதம் காணப்போறேன்

பேரண்டன் பாட்டு:
ஆங்காரம் கொண்டுமே எந்தன் அரிவையை மோசப்படுத்தினாயோடா
போங்காலம் வந்ததோ புத்திகெட்டோ நீயும் போரது செய்ய வந்தாய்
மாளவும் போகிறாய் மதிகெட்ட தவசியே மானுடனே எனைப்பார்
பாரிய கதையினால் ஓங்கி அடிக்கிறேன் உன் கதை முடிந்ததடா

அருச்சுனன் பாட்டு:
கெஞ்சக் கெஞ்ச நீ மிஞ்சிறாய் பாரடா பெய்யாகவே நின்சிரம்
பஞ்சு பஞ்சாகவே பறப்பதைப் பாரடா பதைத்து நீ வீழ்வாயடா

நஞ்சு மொழிசொன்ன வஞ்சி மடியினில் வடிவான உன் தலையும்
தஞ்ச மடையும் பார் தவறாது என் கணை தாற்பரியம் ஈதே

அருச்சுனன் தரு:
சலசலவாதே சமர்த்தனே வாடா சஞ்சல முறுவாயடா
தரைதனில் அடித்து வீழ்த்துவேன் பாரடா அரக்கனே எதிர் நில்லடா
நடுநடுங்காதே மனம் மெலியாதே அரிவையின் சொல்கேட்டு
மல்லுக்கு வந்தனையோ மாண்டு போகவே வந்தாயோ
மலைபோல் நிற்கும், உன் உடலம் சரிந்து விழ சிரமது அறுப்பேனடா
அரைக்கணப் பொழுதினில் உயிர் பிரிவாயடா மூடனே மூர்க்கனே
அலை அலையாய் வந்து தாக்கும் என் பாணம் பார் இனிவழியேதடா
குலையுமுன் உறுதி குலுங்கும் உன் உயிர்க்குலை பறிப்பேன் நீ பாரடா.

சபை விருத்தம்:
வாரிசூழ் உலகம் வள்ளலைக் காண நெஞ்சில்
கோரிய தவத்தைச் செய்து குணமுடன் இருக்கும்போது
வீரிய புகழ்ப்பேரண்டன் விஜயனால் மடிந்து போக
பேரண்டச்சி தானும் பதறியே கதறுவாளே.

வேடன் வரவு விருத்தம்:
ஆதியாய் உலகமதில் எங்கும் நிறைந்துமே அரும் பெரும் சோதியாகி
பாதிமதி அணிந்த பரம சிவனார் அங்கே பற்குணன் தனைக் காக்கவெண்ணி
சோதிபோல் உமையவளும் துணையாக வரவென்று சுந்தரியும் தானெழுந்து
மதியிழந்த சூரனையே கொல்லவெண்ணி வனந்தனிலே வேடுவரூபமாகவே தான்
கதிகலங்கி நிற்குமந்தப்பார்த்தன்தானும்என்னையார் என்று அறிந்திடாமலே தான்
விதிமுடிந்த மூகாசுரன் வதைபடக் கைதனிலே வில் வாள் கத்தி ஈட்டியுடனே
காட்டினில் சென்றுமே வேட்டைகள் ஆடவே கணைகளைத் தானெடுத்து
பன்றியாய்வருகின்ற அசுரனைக்கொல்லவே பரமசிவன்வேடனாய்வருகின்றாரே.

வேடுவிச்சி விருத்தம்:
சிவனுடன் உமையாள் தானும் சேர்ந்துமே இருபேருமாக
கைலாயம் தன்னைவிட்டுக் கானகம் போகவெண்ணி

அருச்சுனன் தன்னைக் கண்டு அன்புடன் வரம் கொடுக்க
மங்கையாள் உமையாள் தானும் வேடுவப்பெண்ணாய் வருகின்றாளே.

வேடன் தரு:
கைலாய வேடன் வந்தானே- களிப்பினொடு
கைலாய வேடன் வந்தானே- வனத்திடை
காதலி உமையுடன் வேட்டையும் ஆடவே
கைலாய வேடன் வந்தானே

வேடுவிச்சி தரு:
சங்கு மணிமாலை மின்ன சல்லிடங்கள் துலங்க
பொங்கு மொழி பேசி உமை புறப்பட்டாள் புருஷனோடு

வேடன் மறுதரு:
வனமயில் இறகொடு சங்கு வளைபூண்டு
வடிவான கச்சைய் இடை இறுக்கிக் கட்டி
கைலாய வேடன் வந்தானே வனத்திடை
கைலாய வேடன் வந்தானே

வேடுவிச்சி கொச்சகம்:
கோலமுள்ள குறிப்புடனே இங்கு வந்து நிற்பவரோ
சாலமுண்டு நான் தவித்துத் தனியாக நிற்பதுவோ
நீலமுண்ட கண்டனாரைத் தேடி வந்த தபசியாரை
ஆலமுண்ட அழகனார் என்ன செய்யப் போகிறார் அறியேன்

வேடுவிச்சி வசனம்:
அன்பு நாயகரே! யாரோ ஒரு மனிதன் அனேக நாளாக அன்ன ஆகாரமின்றி உமை நினைந்து அருந்தவம் செய்கிறான். அவன் யாரோ? நானறியச் சொல்லும் நாதா.

வேடுவிச்சி தரு:
மன்னவனோ வேதியனோ நாதா அவன்
வானவனோ தானவனோ சுவாமி

வேடுவன் தரு:
வில்லில் வல்ல வீரனடி பெண்ணே அவன்
சூராதி சூரனடி கண்ணே.

வேடுவிச்சி தரு :
தஞ்சமாக காடு வந்த தவசி - இங்கு
தவம் செய்வதேனோ என் சுவாமி

வேடுவன் தரு :
பாசுபதம் பெற வந்தான் பார்த்தன் - அவன்
பாண்டவருள் ஒருவனடி பெண்ணே

வேடுவன் வசனம் :
உமையவளே! இந்த அருச்சுனன் அவன் தவத்தை அழிக்க வந்த பன்றியைக் கொன்று விட்டான். வா, விபரம் அறிவோம்.

வேடுவன் விருத்தம் :
மறையவனோ வேதியனோ வானவனோ தானவனோ
இறுமாப்புடன் தவம் செய்யும் மானிடனே மமதையாலோ
இளைத்துக் களைத்து வந்த பன்றியைக் கொன்றிட்டாய்
இதுவோ உன்தர்மம் நரனே நீ கூறுவாயே

வேடன் வசனம் :
கேளடா, தவசியே! பசியால் களைத்து வந்த பன்றியைக் கொன்றிட்டாயே. ஏனடா?

அருச்சுனன் வசனம் :
கேளடா, வேடுவனே! சடாபாரம் பொருந்திய சிவனை நினைந்து இங்கு

தவம் செய்ய வந்திருக்கின்றேன். என் தவத்தைக் கலைக்க வந்த இந்தப் பன்றியைக் கொன்று விட்டேன். அறியடா வேடனே.

வேடன் பாட்டு :

கடகடவாதே காளை அச்சுனா
காண்டீபம் பெரிதென்று கையில் எடுத்தாயோ
தடதடவாதே தண்டிப்பேன் உன்னை
தரையிலே வீழ்த்தி மடிப்பேன் பாரடா
திருடனைப் போலவே முளிக்கிறாயடா
முன்னால் வாடா முடங்க வைக்கிறேன்
அறியடா என்னை உனக்கு நான் காலன்
உன்னுயிர் பறிக்கவந்த வேடன் நான் காண்பாய்

அருச்சுனன் பாட்டு :

சமர்த்தனே வாடா சண்டை செய்வோம் நாம்
எதிர்த்து நிற்பாயடா என் எதிர் நின்று
தகிர்தகிட தாம் என தாகிட தோம் என
தட்டியுன் உடலை நான் எட்டி எறிகின்றேன்

வேடன் தரு :

முந்தாதே மாதவனே நீ முனகுவாய் பாரடா
முந்திவரும் என் கணைக்குப் பதிலேது கூறடா
வந்தாயோ என்னை நீ வதைக்கவும் எண்ணமோ
வருபகழி வலி அதனை வருந்தியே ஏற்பாயடா

அருச்சுனன் தரு :

மிஞ்சாதே வேடுவனே நீ மிகுந்த பணியினை
தொடுத்து உன் சடைமுடி பஞ்சாக ஆட்டி
கணை எடுக்கிறேனடா தொடுத்து முடிக்கிறேன்
அடுமுனது தனுமுறிய அடிப்பேன் என் வில்லால் பாரடா

சபை விருத்தம் :
அரிய மண்ணில் உண்டான உயிர்க்கெலாம் அடிகள்பட்ட
வரிகொள் உடலெலாம் வருந்தியே வலிமிகுந்து
நெரிபட விட்டான் பார்த்தன் உண்மை தெரியாமல்
திரிபுர எரியனை ஈசனை அறியாது வில்லால் அடித்தபோதே

அருச்சுனன் தரு :
பொல்லாத வேடனொடு போர் செய்யும் வேளையிலே
சொல்லொணாத் துயர் கொண்டு சோர்வும் மிகுந்து
வல்லமையாவுமே வலிதிழந்து போகுதே ஈசா
நல்லசிந்தனை தந்து காத்தருள்வாயே தயாபரா

(சிவபெருமான் பார்வதி தோன்றுதல்)

அருச்சுனன் விருத்தம் :
சங்கரா இறைவா சம்பு சதாசிவா போற்றி போற்றி
பொங்கர வணிந்த மூர்த்தி புரந்தரா புனிதா போற்றி
கங்கையைச் சடையில் வைத்த காருண்யா போற்றி போற்றி
மங்கையோர் பாகம் வைத்த மகேஸ்வரா போற்றி போற்றி

சிவபெருமான் பாட்டு :
வாராய் அருச்சுனா நீ என்னையும் அறியாமல்
ஓராது ஈசனையே ஓங்கிய வில்லாலடித்தாய்
மாறா மகிழ்வுற்றேன் உன் அரும் தவம் கண்டு
கூறாய் நீ வேண்டுவது குறித்து என்னிடத்தில்

அருச்சுனன் விருத்தம் :
அருமறை முதல்வா நீயும் அறியாத தொன்றில்லை
கருது சத்துருக்களாலே கானகம் வாழ்கின்றோம்
பெருகுமோர் பாரதப்போரிலே வெற்றி நான் பெறுவதற்கு
பரமனே அடியேனுக்கு பாசுபதம் அருளுவாயே

சிவபெருமான் விருத்தம் :
வில் இருந்தா விஜயா நீ விரும்பியே கேட்டது இந்தா
மல்லிந்தா மந்திரமிந்தா மகா பாசுபதமும் இந்தா
சொல் இந்தா தூணி இந்தா வெற்றி நீ பெறுவாய்
சொல்லுமுன் துணைவர் தாமும் அகம் மகிழ வாழ்வீர்தானே

சிவபெருமான் வசனம் :
வில்லுக்கு விரயனே!
நீ கேட்ட திவ்வியாஸ்திரம் இதோ.
தந்தேன் பாசுபதாஸ்திரம்.
வாழ்க நீடூழி.

***









இசை நாடகக் கூத்துக்களில் பயிற்சியும் தேர்ச்சியும், நல்ல குரல் வளத்தையும் உடைய இவர் நாட்டார் கலைகளின் வளர்ச்சிக்கும் தன்னை அர்ப்பணித்துள்ளார். தன் கலைக்கு தானே இரசிகனாக இருக்கிறார். ஈழத்திலே இசை நாடக கலைக்கு கலாநிதி தம்பிஜயா கலாமணி அவர்களுடைய பங்கு காத்திரமானது. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இக்கலையை வளர்க்கும் பணி சிறப்பானது. கடல் கடந்து கல்விக்காக சென்ற போதும் இசை நாடகக் கலைப் பணியை செய்த இவர் மென்மேலும் பல பங்களிப்புக்களைச் செய்ய இவருக்கு காலம் நல்ல இடம் கொடுக்க வேண்டும். இப்படியாக இவரின் இசை நாடகத்திற்கான பங்களிப்பு பற்றி சிறப்பாக ஆராயப்படின் அவர் பங்களிப்புக்கள் துலாம் பரமாக தெரியவரும், ஆதலால் அவருடைய பெயர் ஈழத்தின் இசை நாடக வரலாற்றில் இருந்து தவிர்க்க முடியாதது.

– விரிவுரையாளர் து.இளங்குமரன்

த. கலாமணி அவர்களுடன் நாடக ஒத்திகையில் கலந்து கொண்டால் அது ஒரு சிறந்த இசை நாடகப் பட்டறையாக அமைந்து விடும். அதில் கலந்து கொள்ளும் எல்லோரும் இசை அனுபவத்தைப் பெறக் கூடிய அளவிற்கு அவரது செயற்பாடுகள் அமையும். நேர முகாமை கூட அவரிடம் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். எத்தனையோ வேலைப்பளுக்கள் மத்தியிலும் ஒத்திகையை சரியான நேரத்தில் ஆரம்பித்தல் சரியான நேரத்தில் நிறைவு செய்தல் போன்றவற்றில் மிகக் கண்டிப்பாக இருப்பார். என்னைப் பொறுத்தவரையில் கலாநிதி த. கலாமணி அவர்கள் கடந்த கால இசை நாடக அரங்கிற்கும் தற்கால இசை நாடகத்திற்கும் ஒரு பாலமாக விளங்குகிறார் என்றே கருதுகின்றேன்

– அதிபர் ந.விமலநாதன்

ISBN 955524963-6
9789555249638